# 17.05.1989-ல் சாம்பலாக்கப்பட்ட சம்மாந்துறை

903.

முஸ்லிம் இளைஞர் முன்னணி,
சம்மாந்துறை.

B. No: 85
Noorul Hagu 14/2/90

# 17-05-1989 ல்

# சாம்பலாக்கப்பட்ட

# சம்மாந்துறை

B. No: 385
31/10/91

M.M.M. NOORUL HAGU
EDITOR OF AL HUTHA
129, OSMAN ROAD
SAINTAMARARUTHU - 1

0903

'HATHIBUL HUTHA'
M.M.M. NOORULHAGU J.P
DIPLOMA IN MASS MEDIA
FREELANCE JOURNALIST & WRITER
129B, OSMAN ROAD,
SAINTHAMARUTHU - 05

OK DEPOT
GODA ROAD
MBO 9.
T. PHONE 697768

வெளியீடு:
இஸ்லாமிய இளைஞர் முன்னணி,
சம்மாந்துறை.

முதற்பதிப்பு: 1989

## சமர்ப்பணம்

இன வெறித் தாண்டவத்தின்
இடையிலே அகப்பட்டு
கொலையுண்ட,
எம் இஸ்லாமிய சகோதரர்களுக்கு
சமர்ப்பணம் செய்கிறோம்.

# சற்று நில்லுங்கள்...

கடந்த 17-05-89 புதன்கிழமையன்று சம்மாந்துறை நகரை அலங்கரித்த தீப் பிளம்புகளும், துப்பாக்கி வெடிகளும், ஷெல் வெடிகளும், ஊரின் ஒவ்வொரு ஆத்மாவையும் அகதி முகாமினுள் தள்ளி அல்லாஹ்வின் நாமத்தை உச்சரிக்க வைத்து விட்டது.

அந்த ஆத்மாக்களுள் நானும் எனது உயிர் நண்பர்களும், சகோதரர்களும் அந்த வீதிகளில் உயிரைக் கையில் பிடித்தவாறு அல்லாஹ் ஒருவனின் பாதுகாப்பை மட்டும் உறுதி செய்தவர்களாக ஓடிக் கொண்டிருந்தோம்.

இந்நிகழ்வு சம்மாந்துறை முஸ்லிம்களின் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயமாய் பதிக்கப்பட்டு விட்டது. இந்த அத்தியாயம், அன்றுதான் ஆரம்பிக்கப்படவுமில்லை. அன்றோடு முடிவடையவுமில்லை.

முடிவடையா இவ் அத்தியாயம், புரட்டப் புரட்ட புழுதி படிந்ததாகவே புரண்டு கொண்டிருக்கின்றது இன்று அகதி முகாமினுள் புரண்டு கொண்டிருக்கும் நாம், நாளை என்ன ஆவோமென்பதே புதிர்தான்.

ஆதலால் எஞ்சுபவர்களும், எதிர்கால சந்ததியர் களும், அறிந்து கொள்வதற்கும், தெரிந்து கொள்வதற் குமாக இந்நிகழ்வினை நூலுருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

எனது தனிப்பட்ட இம்முயற்சிக்கு காலாகவும், இதை உருப்பெற வைக்க உதவியாகவும், தகவல்களை சேகரித்தும் தந்த எனது உயிர் நண்பர்களுக்கும், சகோதரர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியைக் கூறுவதுடன்.

எனது இந்தக் கடமையினை சமூகத்திற்காக நான் ஆற்றும் பணிகளில் மிகவும் சிறியதொரு பணியாகக் கருதுவதாலும், சமூகத்திற்காக என்னை இன்னும் சிறந்த முறையில் அர்ப்பணிக்க வேண்டும் என்பதற் காகவும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்துடன் நான் மஹ்ஷரில் எழுப்பப்பட வேண்டும் என்பதற்காகவும். முஸ்லிம்களாகிய நாங்கள் இன்னும் பூரணமாக இஸ் லாத்தினுள் நுழையாது இருந்து கொண்டிருக்கும் இந்நிலையில் என்னை உங்கள் முன் உருவமாய் சமர்ப் பிக்க விரும்பவில்லை. (அல்ஹம்துலில்லாஹ்)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

-நன்றி-

-ஆசிரியர்-

இலங்கைத் திருநாட்டின் கிழக்குப் பகுதியிலே நீண்டு, பரந்து பச்சைப் பசேலென காட்சி தந்து கொண்டிருக்கும் வயல் வெளிகளினாலும், நீரோடைகளி னாலும், சூழப்பட்டு தனித்துவமான இலட்சணங்களுட னும், தனிச் சிறப்புக்களுடனும், இலங்கிக் கொண்டிருக் கும் 260 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள ஊரே சம்மாந்துறையாகும்.

இது, வடக்கே சேவகப்பற்று வயல் வெளியையும் தெற்கே மல்கம்பிட்டியையும், கிழக்கே மாவடிப்பள்ளி யையும், மேற்கே மல்வத்தையையும் சொண்டது. இங்கு ஏறக்குறைய 47,000 முஸ்லிம்களும் 9,000 தமிழர்களும் வாழ்கிறார்கள்.

சம்மாந்துறை வாழ் முஸ்லிம் மக்கள் இதுவரை காலமும் ஏனைய இனத்தவருடன் மனக்கசப்பற்று அன்னியோன்னியமாகவும் சகோதர வாஞ்சையுடனும் பழகியது மட்டுமன்றி தமிழ் இன மக்களோடு மிகவும் நெருக்கமாகவும், அன்பாகவும், பழகி அவர்களது சுக துக்கங்களில் இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்தவர்கள்.

இங்கு வாழும் முஸ்லிம்கள் அவர்களது பாரம்பரியத் தொழிலான விவசாயத்தினை எந்த இடையூறுகளுமின்றி செய்து வருவதுடன் இங்குள்ளவர்களில் அனேகமானோர் கூலித்தொழில் செய்வதன் மூலம் தம் வாழ்க்கையை நடாத்தி வருபவர்கள். இங்கு வறுமைக் கெதிராகப் போராடிக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் உட்பட அனைவரும் அன்றாடம் வயல்களுக்குச் சென்று நாட் சம்பளங்களுக்கு கூலி வேலை செய்து தம வயிற்றுப் பசியை கழுவி வாழ்பவர்கள்.

சம்மாந்துறையை அண்மி வாழும் தழிழ்க் கிராமத்தவர்களும், ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழர்களும், சம்மாந்துறையில் உள்ள தொழில் நிலையங்களிலும், அரிசி ஆலைகளிலும், வயல் வெளிகளிலும், கருங்கல் உடைப்பு, செங்கல் உற்பத்தி நிலையங்களிலும், மற்றும் ஏனைய கடைகள், வியாபாரங்கள், அங்காடி விற்பனைகள் போன்றவற்றிலும், எவ்வித இடையூறுகளுமின்றி சுதந்திரமாக தொழில் புரிந்து வந்தனர். இங்கு வாழும் முஸ்லிம்கள் இனப்பாகுபாடு காட்டாமல், அவர்களுக்கு தொழில் வாய்ப்பு முதல், வாழும் இடம் வரை வசதி செய்து கொடுத்தது மட்டுமன்றி, அன்பாகவும், ஆதரவாகவும் பழகி வந்ததை எந்தத் தமிழ் நெஞ்சமும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

தமிழ் இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற போது அவர்களது போராட்டப் பாதையில் எந்த இடையூறுகளோ துரோகங்களோ செய்யாமல்சுயமாக வாழ்ந்து வந்தவர்கள் இப்பிரதேச முஸ்லிம்கள்.

அவர்களின் போராட்டம் வலுவடைந்து சென்ற போது அனுதரவாக வீடு வாசல்களை இழந்தும், உற்றார் உறவினர்களை இழந்தும், பசியாலும், பட்டினியாலும் வாடிக் கொண்டிருந்த தமிழ்த் தாய்மார்கட்கும், சகோதர



சகோதரிகட்கும், உணவு முதல் உறையுள்வரை கொடுத்து அநியாயங்களிலிருந்து காப்பாற்றியும், தம் உறவினர்களுள் ஒருவராக கணித்தும் மனிதாபிமான அடிப்படையில் மனித உயிரென்று மதித்து ஆதரித்தவர்களே சம்மாந்துறை முஸ்லிம்கள் என்பதனை எந்தத் தமிழ் நெஞ்சமும் மறுத்துரைக்க முடியாது.

தமிழ் இளைஞர்கள் தம் உயிரைக் காப்பாற்ற அடைக்கலம் தேடி, அவதிப்பட்டு, உயிர்ப்பிச்சை கேட்டுத் தவித்து நின்ற வேளைகளிலே, அவர்களை மனிதனென்று மதித்து உபசரித்து காப்பாற்றியவர்களே இந்த முஸ்லிம்கள் என்பதை எந்தத் தமிழ்ப் போராளிகளும் மறக்க முடியாது.

இவ்வூர் முஸ்லிம்கள் மனிதாபிமான முறையில் எல்லா உயிர்களையும், உடமைகளையும் நீதியான முறையில் மதித்து இங்குள்ள தமிழர்களையும் அது போல் கணித்து வாழ்ந்ததற்குப் பரிசுதான், இங்கு தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் மிருகத்தனமான காட்டு மிராண்டிச் செயல்.

நீதியின் அடிப்படையில் நிர்க்கதியானவர்களுக்கு நியாயம் கூறிய இந்த முஸ்லிம்களுக்கு நன்றிக்கடன் கூறும் நயவஞ்சகர்களின் கோரத்தாக்குதல்தான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடூரச் செயல்கள்.

''தன்னைப்போல் மற்றவரையும் நேசி'' என்ற கூற்றிற்கிணங்க தமிழர்களை நேசித்து வாழ்ந்ததற்கு கைமாறுதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநாகரிகச் செயல்கள்.

சம்மாந்துறை முஸ்லிம்கள் தமிழர்கள் மீது காட்டி வந்த அன்பும், பண்பும், பாசமும், உதவியும் ''நச்சுப் பாம்பிற்கு பால் வார்த்ததற்குச் சமன்'' என்பதை 17.05.1989 அன்றுதான் தமிழர்கள் இந்த முஸ்லிம்களுக்கு உணர்த்தி வைத்தனர்.

இவ் உணர்த்தல் முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தப்பட்ட பின்னர்தான், இதுவரை காலமும் வீதிக் குப்பைகளை வீட்டினுள் கொண்டு வந்தோம். நச்சுப் பாம்புகளை படுக்கையறையுள் விட்டு வைத்தோம், சாக்கடை நாற்றங்களை சந்தணங்களாக மதித்து வந்தோம் என்ற உண்மைகள் புலப்படுத்தப்பட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் முன் எவ்வளவு தூரம் முஸ்லிம்களை மதித்து வந்தார்களோ, ஒப்பந்தத்தின் பின் அவ்வளவு தூரம் மிதிக்க முற்பட்டதுடன் முஸ்லிம்களின் தனிப்பட்ட வாழ்விலும் கை வைக்கத் தொடங்கினர்கள். முஸ்லிம்களின் உரிமைகளையும், உடமைகளையும் எவ்வளவு தூரம் குட்டிச் சுவராக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குட்டிச் சுவராக்க, என்னென்ன வழிகளைக் கையாள முடியுமோ அவ்வாறெல்லாம் செயற்பட்டார்கள்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் முஸ்லிம்கள் எங்கிருந்தோ வந்து எமது தாயகத்தை ஆக்கிரமித்துள்ளார்கள். அவர்கள் வந்தான் வரத்தான்கள் என்று கூறி முஸ்லிம்களின் பரம்பரைச் சொத்தான விவசாயக் காணிகளை உரிமை கோர முற்பட்டதுடன், தமிழ்க் கிராமங்களை அண்மியுள்ள முஸ்லிம்களின் காணிகளை அவர்களை ஆயுத முனையில் விரட்டி விட்டு விவசாயம் செய்யவும் ஆரம்பித்தார்கள். இப்படியான அத்துமீறல்களை தட்டிக் கேட்ட விவசாயிகள் ஆயுதமுனையில் மட்டந்தட்டி மடக்கப்பட்டனர். சில முஸ்லிம் பிரமுகர்கள் தம் சொந்த வயல்களைச் செய்கை பண்ணுவதற்குக் கூட கப்பம் கட்ட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

அப்பாவி முஸ்லிம்கள் தம் நெற்றி வியர்வை சிந்தி மாடாக கஷ்டப்பட்ட வேளாண்மையை ஆயுதமுனையில் அறுவடை செய்து சென்றார்கள்.



சில விவசாயிகள் தங்கள் வயலை அறுவடை செய்து நெல்லை ஏற்றக் கூடிய தருணத்தில் ஆயுதபாணிகளான இளைஞர்கள் அவ்விடம் சென்று, அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கூலியாட்களை அச்சுறுத்தி வயலில் நிற்கும் ''டிரக்டர்'' பெட்டியில் நெல் மூடைகளை ஏற்றுவித்து, அதே டிரக்டரின் மூலம் நெல் மூடைகளை அபகரித்துச் சென்றார்கள் அவர்கள் அவ்வாறு நெல்லைக் கொள்ளையடித்துச் செல்லும் போது ''பொலிசாருக்கு அறிவித்தால் மின் கம்பத்தில் கட்டப்படுவாய்'' என்றும் அவ்விவசாயிகளை அச்சுறுத்திச் சென்று விடுவார்கள்.

இப்படியான வேலைகளில் சில குழுக்கள் ஈடுபட இன்னும் சில குழுக்கள் அண்மைத் தமிழ்க் கிராமங்களான மல்வத்தை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி, சொறிக் கல்முனை, வீரமுனை போன்ற தமிழ்க் கிராமங்களை ஊடறுத்து வரும் பாதைகளால் கொண்டு வரப்படும், நெல் மூடைகளை கொள்ளை அடித்தார்கள் இன்னும் சில குழுக்கள் நெல் ஏற்றி வரும் வாகனங்களுக்ேற்ப 05 மூடை நெல் தொடக்கம் 15 மூடை நெல் வரை அறவிட்டாரர்கள்.

இவ்வாறான குழுக்கள் இந்தக் கீழ்த்தரமான கொள்ளையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, இக்கொள்ளைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்திக்கு அடுத்த சந்தியில் இந்தியப் படையினர் காவல் புரிந்து கொண்டு நின்றது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொடுமையினைச் சகிக்க முடியாத சில முஸ்லிம்கள் தம் மூலதனங்களை இழந்த பின் கூலி வேலை செய்து வாழ்க்கை நடாத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மேற்கூறப்பட்ட பாதைகளால் வரும் முஸ்லிம்களது மோட்டார் சைக்கிள்கள், உழவு இயந்திரங்கள்,

லொறிகள் போன்றவற்றை பறித்துச் சென்றார்கள். சிலரது வாகனங்களைக் கடத்தி வைத்து பெரும் தொகைப் பணங்களை கப்பமாக அறவிட்ட பின் விடுதலை செய்தார்கள். கப்பம் கொடுக்க மறுத்தால் அவ்வாகனங்களை நிரந்தரமாக மறைத்தார்கள். மேலும் அவ்வாறு கப்பம் செலுத்த மறுக்கும், வாகன உரிமையாளர்களின் சொத்துக்களைப் பலவந்தமாக கொள்ளையடித்தனர். சிலரது வீடுகளுக்கு இரவு வேளைகளில் வந்து தட்டியெழுப்பி ஆயுத முனையில் வாகனங்களைக் கொண்டு சென்றார்கள்.

அது மட்டுமன்றி சில உத்தியோகத்தர்களையும் வியாபாரிகளையும் ஆயுத முனையில் கடத்திச் சென்று பெருந்தொகையான பணங்களை கப்பமாக அறவிட்ட பின்னர் விடுதலை செய்தார்கள்.

அரிசி ஆலைகளை வைத்திருக்கும் ஆலைச் சொந்தக்காரர்களை அச்சுறுத்தி, அவர்களது வாகனங்களையும் கூலியாட்களையும் பயன்படுத்தி தேவைக்கேற்றபடி அரிசி மூடைகளை ஏற்றிச் சென்றார்கள்.

வெளியூர்களிலிருந்து வியாபாரத்திற்காக வரும் முஸ்லிம் வியாபாரிகளினது லொறிகளை வழிமறித்துக் கொள்ளையடித்தார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களை ஊடறுத்து வரும் தொலை பேசி, மின்சாரக் கம்பிகளை அறுத்து விடுவதன் மூலம் அடிக்கடி சம்மாந்துறையை இருளில் ஆழ்த்தியும், தொடர்புகளை துண்டித்தும் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறாக அநியாயங்களும், அட்டூளியங்களும் நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே சென்றன.

இவைகளைக் கூறி நீதி பெற முடியாத நிலையில் இங்குள்ள பொலிஸ் நிலையங்களும், நீதி மன்றங்களும் சுயமாக இயங்க முடியாத நிலையில் இருந்தன. இங்குள்ள



இந்திய அமைதிகாக்கும் படையிடம் இவை பற்றி முறையிட்டால் அது ''ஓடும் நீரில் எழுதும் எழுத்துப்'' போலாகி விட்டது. ஏனெனில், இந்தியப் படையினர் தமிழர்களின் நலன் பேணவே வந்தவர்கள், ஆகவே இவைகளுக்கெல்லாம் அவர்களால் பரிகாரம் தேட முடியாது என்ற சகிக்க முடியாத துரதிஷ்ட நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டார்கள்.

இந்தியப் படையினரின் தலையீட்டினால் இலங்கைப் பொலிஸார் பூரணமாக இயங்கி நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தனர்.

இவ்வாறான அனுதரவான நிலைமைகள் தலைதூக்கிக் கொண்டேயிருந்தன. இந்நிலைமையில் உணர்ச்சியுள்ள முஸ்லிம் இளைஞர்கள் இவைபற்றிக் காரசாரமாகப் பேசினாலோ, அல்லது சமூக நலனில் கூடுதலாக அக்கறை காட்டினாலோ அவர்கள் திடீர் திடீரென கடத்திச் செல்லப்பட்டார்கள். கடத்தப்பட்டவர்கள் சித்திரவதைகளுக்குள்ளாக்கப் பட்டு கொல்லப்பட்டார்கள். சிலரது ''ஜனஸா''க்கள் கூட இதுவரை கிடைக்கப்பெறவில்லை. என்ன ஆனார்கள், எப்படி இறந்தார்கள், எங்கு இறந்தார்கள் என்ற தகவல்கள் கூட இதுவரை கிடைக்கவில்லை.

இவ்வரிசையில் முன்னாள் சம்மாந்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீட் அவர்களின் வீட்டுக் காவலராய் இருந்த மஜீட் என்ற இளைஞர் அவரது வீட்டுக்காவலில் இருக்கும் போதே கடத்திச் செல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது மறுதினம் ''அப்துல்'' என்பவர் கடத்திச் செல்லப்பட்டார்.

அஃதே இஸ்ஸதீன் என்னும் இளைஞரும் இன்னும் சில இளைஞர்களும் கடத்திச் செல்லப்பட்டார்கள். சில

முஸ்லிம் இளைஞர்களை ''சமூக துரோகிகள்'' என்ற நாமமிட்டு சந்திகளில் கட்டி வைத்து சுட்டுக் கொண்றார்கள்.

இவ்வாறாக நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டே வந்தது. முஸ்லிம்கள் உண்மைகளைக் கூற முடியாதளவு அச்சப்பட்டார்கள். ஊமையர்களாய், செவிடர்களாய், குருடர்களாய் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சுருங்கக் கூறின் ''கட்டி மேய்க்கும் மந்தைகள்'' போன்று மாற்றப் பட்டார்கள். முஸ்லிம்களின் உணர்வுகளும் உணர்ச்சிகளும் ஆயுத முனையில் மட்டந்தட்டப்பட்டன.

முஸ்லிம் இளைஞர்கள் ''இரண்டு கால் கொண்ட நான்கு கால் மிருகம்'' போன்று நடமாட வேண்டிய நிலையில் நடுத்தெருவிற்குத் தள்ளப்பட்டார்கள்.

இவ்வாறாக நாளுக்கு நாள் கடத்தல், கொள்ளை, கொலை என்ற புதிய புதிய செய்திகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தன. இவ்வாறான சகிக்க முடியாச் செய்திகள் விட்டு விட்டு வந்து பின்னர் தொடராக வர ஆரம்பித்தன. இக் கொடூரச் செயல்கள் பெரும்பாலும் விவசாயிகளினது விதைப்பு வேளைகளிலும், அறுவடை வேளைகளிலுமே அதிகரித்த வண்ணமிருந்தன.

கடந்த 11-01-1989ல் பொதுத் தேர்தல் வேலைக்காக ''வான்'' ஒன்றில் 12ம் குளனி என்னும் முஸ்லிம் கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர்கள் மீது தமிழ் இளைஞர்கள் கோஷ்டியொன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அதில் பிரயாணம் செய்த (6) ஆறு முஸ்லிம்கள் ஸ்தலத்திலேயே துடி துடித்து மாண்டார்கள். வாகனத்தினுள்ளேயே அவர்களது ஜனசாக்கள் இரத்த வெள்ளத்தில் மிதந்தன. வாகனம்



முற்றாக சேதப்படுத்தப்பட்டதுடன் வாகனத்தில் கொண்டு சென்ற பொருட்களும் சூறையாடப்பட்டன.

அதே போல 22-02-1989 புதன்கிழமை முஸ்லிம்களின் ஒற்றுமைக்காக குரலெழுப்பிக் கொண்டிருந்த இளைஞர் சகோ; எம். ஹனீபா என்பவர் அவரது வீரமுனை இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது ஜனஸா அவரின் வீட்டிற்கு முன்னுள்ள வீதியில் இரத்த வெள்ளத்தில் மிதந்து கிடந்தது.

அதே விதமாக ஜப்பார் என்பவர் புளக் 'ஜே'மேற்கு பிரதேசத்தில் ''பண்ட் ரோட்'' வழியாக மோட்டார் சைக்கில் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது மறைந்திருந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது ஜனஸா, வாய்க்காலினுள் மோட்டார் சைக்கிலுடன் கிடந்தது.

25-02-1989 நள்ளிரவு செம்மண்வட்டையில் வசித்து வரும் இளைஞர் ஹாறுன் என்பவர் தமிழ் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு வீரமுனையில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டார்.

25-03-1989 இரவு 9.00 மணியளவில் அலிவன்னியா வீதி, நூர் சந்தி என்னுமிடத்தில் நின்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த தமிழ் இளைஞர் குழுவினர் வீரமுனை நோக்கித் தப்பி ஓடினர். இச் சூட்டுச் சம்பவத்தில்,

சகோ: எம்.ஏ. முஸ்ராக் அலி என்னும் வங்கி ஊழியரும்,
,, : எம்.ரீ.எம். யாசீன் என்னும் கிராம சேவகரும்
ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டார்கள். சகோதரர் கே எம்.எஸ்.எம். பழீல் என்பவர் இன்னும் குற்றுயிராகக் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்.

04-04-1989 நண்பகல் 2ம் குறிச்சியில் வாழ்ந்து வந்த சகோ: எம். ஏ. ஜலால்டீன் என்னும் 18 வயது இளைஞர் கடத்திச்செல்லப் பட்டார். இவரை எவ்வளவோ தேடியும், தமிழ் இயக்கங்களிடம் மண்றுடி வேண்டியும் இவர் கிடைக்கவில்லை. இவரது குடும்பத்தில் இவர் மட்டுமே ஆண் பிள்ளையாகும். ஐந்து சகோதரிகளின் வாழ்க்கையை சுமையாகக் கொண்ட அவ் இளைஞர் 40 நாட்களின் பின் 13-05-1989 அன்று மண்டையோடு தகர்க்கப்பட்ட நிலையிலும், கைகளும், கால்களும் கட்டப் பட்ட நிலையிலும எலும்புக்கூடாக, வீரமுனைத் தமிழ்க் கிராமத்தை அண்மியுள்ள நெல்லிச்காடு என்னுமிடத்தில் புதையுண்டிருக்க கண்டு பிடிக்கப்பட்டார். இவரது எலும்புக்கூடு இன்றும் சம்மாந்துறை வைத்தியசாலையில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

04.05.1989 அன்று நோன்புப் பெருநாளை முன் னிட்டு கலை நிகழ்ச்சியொன்றிற்காக வீடியோ ஒளிப்பதிவு செய்து விட்டு நோன்பு திறப்பதற்காக வீடு நோக்கி வந்து கொண்டிருந்த பாடசாலை மாணவர்களின் "வானை" அம்பாறை வீதியில் வைத்து வழி மறித்த ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்கள் அவ் வான் மீது சாரா மாரியாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

அந்த நாகரீகமற்ற, இரக்கமற்ற, வெறிகொண்ட தமிழ் இளைஞர்களின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கான சகோதரன் முஹம்மது நஜீப் (வயது 16) அவ்விடத்தி லேயே துடி துடித்து மரணமானுர்: சகோ.மு. பாயிஸ் என்னும் பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கல்லூரி மாண வனும் முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலச் சிற்பியுமான அம் மாணவன் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு, இறையடி எய்தினுர். அந்த "வானின்" சாரதியான சுபைதீன் என்பவர் அம்பாறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கண்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு, அங்கேயே மரணமானுர். அவரது



ஜனுஸா கண்டியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

அந்த வானில் வந்த ஏனைய மாணவர்கள் வீதியிலே முகம் குப்புற வீழ்த்தப்பட்டு சங்கிலிகளாலும், தடிக ளாலும் தாக்கப் பட்டார்கள். அவர்களைத் தாக்கிக் கொண்டிருந்த அவ் இளைஞர்கள் குழு நீங்கள் ஜிஹாத் இயக்கமா? உங்களுக்கு எதற்கடா "ஜிஹாத்" என்று கேட்டவாறு தாக்கியதாம். அவ்வானும் சேதப்படுத்தப் பட்டதுடன் அதில் கொண்டு வரப்பட்ட வீடியோ ஒளிப்பதிவுக் கருவிகள் மற்றும் ஏனைய பொருட்களும் சூறையாடப் பட்டன.

13.05.1989 அன்று ஜனுப்: எஸ். எல். அஹமட் லெவ்வை என்பவருடைய உழவு இயந்திரம் (டிராக்டர்) வீரமுனை அருகில் உள்ள குடாவட்டை என்னும் வய லில் உழுது கொண்டிருக்கும் போது ஆயுதபாணிகளாய் வந்த தமிழ் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

ஜனுப் அஹமட் லெவ்வை என்பவர் இம்முறை புனித "ஹஜ்" யாத்திரைக்குப் போக இருந்ததாகவும், அவ்வாறு மக்கா செல்லப் பணம் இருப்பின் தங்களுக் கும் ஒரு இலட்சம் ரூபாய் பணம் தரவேண்டும், தந்தால் டிராக்டரை மீளத்தருவதாக அக் குழுவினர் கோரிக்கை விடுத்தனராம்: ஆனுல் இதுவரை அந்த டிராக்டருக்கு என்ன நடந்ததென்பதே தெரியாது.

14.05.1989 அன்று நெயினுகாடு என்னும் முஸ்லிம் கிராமத்திற்கு அருகிலுள்ள "திராய் ஓடை" என்னும் வயலில் உழுது கொண்டிருந்த ஏ. மரீயம் வீவி என்ப வருக்குச் சொந்தமான 37ஸ்ரீ3823 எம்எப்240 இன உழவு இயந்திரமும் அதன் சாரதியும், அவ் வயலின் கூலிக்காரரும் ஆயுத பாணிகளாய் வந்த தமிழ் இளைஞர் களால் கடத்திச் செல்லப்பட்டு, அன்றிரவே சாரதியான பீ. எம். சலீம் என்பவரும் வயல் கூலிக்காரரான

எம். ஏ. ஆதம்வாவா என்பவரும் முகங்கள் உருவம் காண முடியாதவாறு மண்டை சிதறிய நிலையில் அகோரமாக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு அவ் வயல் வெளியில் கிடந்தனர். அவர்களது ஜனாஸாக்கள் அம்பாறை வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டு இரண்டு நாட்களின் பின் கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன.

இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து வந்த அனர்த்தங்களால் ஊர் பெரும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. மக்கள் பீதியடைந்தும், ஆத்திரமடைந்தும் காணப்பட்டனர்.

அன்றைய தினம் காலஞ்சென்ற சலீம் என்பவரின் மலையடிக் கிராமத்திலுள்ள ஜனாஸா வீட்டின் பாதையூடாக சில தமிழர்கள் வழக்கத்திற்கு மாறாக அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவ்வாறு சென்று கொண்டிருந்தவர்களின் நடைமுறைகள் ஆத்திரமடைந்திருந்த முஸ்லிம்களை ஏளனப்படுத்தி எள்ளி நகையாடுவது போலிருந்தது. இதனால், ஆத்திரமுற்றிருந்த முஸ்லிம்கள் இவர்கள் ஏதாவது தீய நோக்கில் வருகிறார்கள் என்றெண்ணி அவர்களை அப்பகுதியை விட்டும் வெளியேற்றினர்.

17.05.1989 பி. ப. 1.00 மணியளவில் மினிவான் ஒன்றில் வந்திருந்த ஆயுதம் தாங்கிய குழுவொன்று சம்மாந்துறை மலையடி கிராமப் பள்ளிவாசலடிக்கு வந்து அந்தப் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தவர்கள் மீதும் அருகிலிருந்த பொது மக்கள் மீதும் திடீர்த் தாக்குதல் நடத்தி அடித்துச் சித்திரவதை செய்தனர்.

இதனையடுத்து, மக்கள் பீதியுற்று ''என்ன நடைபெற்று விடுமோ'' என்ற அச்சம் கொண்டு தத்தமது உயிர்களைக் காப்பாற்றும் நோக்குடன் அல்லோலகல்லோலப் பட்டு பாதுகாப்பிடங்களைத் தேடி ஓடோடிக் கொண்டிருந்தனர். பள்ளிவாசலில் பாங்கு (அதான்) சொல்லப்பட்டது.



மக்கள் பள்ளிவாசல்களிலும், பாடசாலைகளிலும், தஞ்சம் புக ஆரம்பித்தனர். பெண்களும், பிள்ளைகளும், கற்பிணிகளும், தாய்மார்களும், வயோதிபர்களும், ஒருவரில் ஒருவர் விழுந்து அவதிப்பட்டு அலறிய நிலையில் தெருக்களில் ஓடிக் கொண்டிருந்தனர்.

பள்ளிவாசலில் பாங்கு சொன்னவுடன், ஏனைய பிரதேச ஆண்களும், இளைஞர்களும் அவ்விடம் நோக்கி விரைந்தனர். மக்கள் வெள்ளம் மலையடிக் கிராமத்தை நோக்கி வருவதைக் கண்ட அத் தமிழ் இளைஞர் குழு அவ்விடத்தை விட்டு வெளியேறி ஊரின் மறு பக்கத்திற்கு வந்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்க் குறிச்சியை அண்மியிருந்த முஸ்லிம் வீடுகளைக் கொள்ளையடிக்க ஆரம்பித்ததுடன் கொள்ளையிடப்பட்ட வீடுகளுக்கு தீயும் வைத்தனர்.

இந் நாசகாரச் செயலைக் கண்ட மக்கள் மேலும் அச்சமடைந்து தம் பிள்ளைகளுடனும், சகோதர சகோதரிகளுடனும் பள்ளிவாசல்களில் தஞ்சம் புகுந்தனர்.

இதனைக் கண்ட முஸ்லிம் இளைஞர்கள் கொதித்தெழுந்தனர். எல்லாப் பள்ளிவாசல்களிலும் பாங்கு ஒலித்துக் கொண்டிருந்தன. ஆத்திரம் பொறுக்க முடியாமல் அச்சதிகாரர்களுக் கெதிராக முஸ்லிம் இளைஞர்கள் தாக்க முற்பட்டனர். இருந்தும், ஆயுதபாணிகளான அச்சதிகாரர்களை முன்னேறி எதிர்க்க முடியாமையால் பின் வாங்கினர்.

இந் நிலைமையில் சந்தர்ப்பத்தை தனதாக்கிக் கொண்ட தமிழர் குழு மேலும் முன்னேறி வீரமுனை அருகிற் சென்று வீரமுனையை அண்மியுள்ள முஸ்லிம்களின் வீடுகளைக் கொள்ளையடித்த பின் தீ மூட்டினர்.

இதனால் வீரமுனையை அண்மியிருந்த முஸ்லிம்களும் 5ம் குறிச்சி, 4ம் குறிச்சி, 3ம் குறிச்சி, செம்மண் வட்டை விளினையடிப் பிரிவு மக்கள் அகதி முகாம்களை நோக்கி ஓடினர்.

இவ்வேளையில் திடீரென அவ்விடத்திற்கு வந்து சேர்ந்த இந்தியாவின் அமைதி காக்கும் படையினர் (ஐ. பீ. கே. எப்.) மேலும் முஸ்லிம் பிரதேசங்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அவர்கள் அவர்களது ''ஜீப்'' வண்டிகளில் இருந்தவாறே அதில் பொருத்தப்பட்டிருக்கும் (எல். எம். ஜி.) துப்பாக்கி மூலம் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இவ் அநியாயத்தின் போது சாலி வீதியில் உள்ள ''நூர்'' பள்ளி வாசலினுள் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த பல இஸ்லாமிய நெஞ்சங்கள் துளைக்கப் பட்டன. ஏ. ஹயாத்து முஹம்மது என்னும் 18 வயது இளைஞன் அவ்விடத்திலேயே துடிதுடித்து மாண்டான். ஏனையவர்கள் அம்பாறை வைத்தியசாலைக்கும், கண்டி வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டார்கள்.

சமாதானம் என்ற போர்வையில் வந்த சாமானிய வீரர்கள் கூட முஸ்லிம்களைச் சீரழிக்க ஆரம்பித்ததால், தம் உயிர்களை மட்டுமாவது காப்பாற்றுவோமென்று அப் பிரதேச மக்கள் வெருண்டோடியதும் அப்பிரதேசம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

யாருமற்ற அந்த நிலையில் அப்பிரதேசங்களுக்கு தாங்கள் தான் ராஜாக்கள் என்ற போர்வையில் வீரமுனைத் தமிழர்கள் வீடுகளைச் சூறையாட ஆரம்பித்தார்கள். கதவுகள் உடைக்கப்படும் சத்தமும், வெடிச் சத்தங்களும் ஓயாது கேட்ட வண்ணமிருந்தன. அப்பிரதேசங்களினூடு இடைக்கிடை இந்தியப் படையினரின் லொறிகள் இரைந்து கொண்டிருந்தன. வீரமுனைத் தமிழ்க் கிராமத்தை



வந்தடைந்த இந்தியப் படையினரது வாகனங்கள் அடிக்கடி வெளியே போவதும் வீரமுனைக்குள் வருவதுமாகவே இருந்து கொண்டிருந்தன.

அவர்களின் வாகனங்களில் அண்மைத் தமிழ்ப் பிரதேசங்களான மண்டூர், சொறிக்கல்முனை, நாவிதன்வெளி, அன்னமலை, காரைதீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி போன்ற இடங்களிலிருந்து தமிழ் இளைஞர்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம். அத்தோடு இங்கு கொள்ளையிடப் பட்ட பொருட்கள் மேற்படி கிராமங்களுக்கு கொண்டு செல்லப் பட்டிருக்கலாமென்று எண்ணக் கூடியதாக இருந்தது,

அன்று மாலை இந்தியாவின் படையினரும், தமிழர்களும் 5ம் குறிச்சியை நோக்கி சுட்டுக் கொண்டு வந்த போது, உயிர் தப்புவதற்காக வீட்டிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்த இருசகோதரர்களான எம்.ரீ.எம். பாறுக், எம்.ரீ.ஏ. கபூர் என்பவர்களும், ஏ. முகையதீன் வாவா (அலி) என்பவரும் படுகாயமடைந்து அம்பாறை வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். மேலும் பலர் நடக்க முடியாத நிலையில் தரையில் வீழ்ந்து, அவர்களது மரணப் போராட்டத்தின் போது கவனிக்க ஆளில்லாமையால் வேலிகளின் ஓரங்களிலும்; சுவரோரங்களிலும் ஒழிந்து கிடந்தனர். சில நோயாளிகளும், வயோதிபர்களும், அலறிய வண்ணம் பல மணித்தியாலங்களின் பின்னர் முகாம்களை வந்தடைந்தனர்.

அன்றைய இரவு ஊரின் ஒருபுறம் எரிந்து வெளிச்சமாகியும், மறுபுறம் மக்களின் அலறலும் ஊரை அலங்கரித்துக் கொண்டிருந்தன.

தமிழ்க் கொள்ளையர் கூட்டம் தம் கைவரிசையை சுதந்திரமாகக் காட்டியவாறு தமது நடவடிக்கைகளை துரிதப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அவர்களது கைங்கர்யத்தை ஊக்குவிக்கும் மத்திய நிலையமாக வீரமுனைக் கோயில் இயங்கிக் கொண்டிருந்தது. அங்கு பொருத்தப் பட்டிருந்த ஒலி பெருக்கி எல்லாக் கொள்ளையர்களையும் ஆளுமை செய்து கொண்டிருந்தது.

அவ் ஒலி பெருக்கி வீரமுனை, மற்றைய கிராமங்களை சேர்ந்த இளைஞர்களது பெயர்களை அடிக்கடி கூறி ஆலயத்திற்கு வருமாறு அழைத்துக் கொண்டிருந்தது.

அது மட்டுமன்றி ''களஞ்சியக் காப்பாளரை இந்தியப் படையினர் அழைக்கிறார்கள்'' என்றும், இயக்க உறுப்பினர்களின் பெயர்களைக் கூறி ஆலயத்திற்கு வந்து போகுமாறும் அழைப்புக்களையும், ஆணைகளையும் விடுத்துக் கொண்டேயிருந்தது. குறிப்பாகக் கூறப்போனால் அந்த ஆலயமே அன்றைய நடவடிக்கைகளைத் திட்டமிட்டு இயக்கிய மத்திய செயலகம் என்றே குறிப்பிடலாம்.

வீரமுனை முஸ்லிம் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொள்ளையும், தீ வைப்பும் 5ம் குறுக்குத் தெருவை அண்மியதும் மீண்டும் நள்ளிரவு 1.20 மணியளவில் பலத்த வெடிச் சத்தங்கள் ஆரம்பித்தன. வெடில்களும் மோட்டார்க் குண்டுகளும் வெடிக்க வைக்கப்பட்டு வீடுகளும், கடைகளும் தகர்த்தெறியப் பட்டன.

மீண்டும் அந்த நள்ளிரவில் 1ம் 2ம் 3ம் 4ம் குறிச்சி மக்களும், கருவாட்டுக்கல், புளக், 'ஜெ' உட்பட ஏனைய பிரதேச மக்கள் அனைவரும் அகதி முகாம்களுக்கு ஓடினர். அவ் இரவின் நிலா வெளிச்சத்தில் மக்கள் வெருண்டோடிய காட்சி '(மஹ்ஷர் மைதானத்தை'') நினைவூட்டியது.

இந்திய உதவிப் படையினரும், தமிழர்களும், துப்பாக்கி வேட்டுக்களையும். வெடிச்சத்தங்களையும், தீப் பிளம்புகளையும் ஏற்படுத்தி மக்களை வெருண்டோடச் செய்த பின்னர் மீண்டும் சூறையாடிக் கொண்டிருந்தனர்.



வீடுகள் உடைக்கப்படும் சத்தமும் பாரிய குண்டுகள் வெடிக்கும் சத்தமும் கேட்ட வண்ணமே இருந்தது.

அகதிகளான பெண்களும், ஏனையோரும் தக்பீர் முழங்கிய படியும், துஆ பிரார்த்தித்த படியும், 'ஓ' வென்று ஒப்பாரி வைத்த படியும் இருந்தனர். பள்ளி வாசல்களில் சேர்ந்த மக்கள் இடம் போதாமையால் நெரிசல் பட்டு அவதிப்பட்டனர். கற்பிணிகளும், குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களும், கைக் குழந்தைகளும் வீழ்ந்து கிடந்தனர். சில கற்பிணிகளது பிரசவம் முகாம்களிலேயே நடைபெற்றது.

அந்த நள்ளிரவில் இந்தியப் படையினரின் லொறிகள் பெரும் சுமைகளுடன் இரைந்து செல்லும் சப்தங்கள் கேட்டன. கொள்ளையிடப்பட்ட பொருட்களில் பெரும் பாலானவைகளை ஏற்றிச் செல்வதற்கு இந்திய கூலிப் படையின் வாகனங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

வெடிச் சத்தம் சாராமாரியாகப் பொழிய ஆரம்பித்ததும், விளினையடிச் சந்தியிலிருக்கும் ''அல்பத்தாஹ்'' பள்ளிவாசலில் அடைக்கலம் புகுந்திருந்தவர்கள் அச்சம் மிகுதியால் மற்றயவர்களின் உதவி கோரி 'பாங்கு' சொன்னார்கள்.

உடனே அப்பள்ளிவாசலினுள் சப்பாத்துக் கால்களுடன் நுழைந்த இந்தியப் படையினர் அங்கிருந்து இரண்டு சகோதரர்களைக் கைது செய்ததுடன் அங்கிருந்த ஒலி பெருக்கி (அம்பிளிபயர்) இயந்திரத்தையும் கொண்டு சென்றனர்.

கொள்ளையை நடாத்திக் கொண்டிருந்த தமிழர்கள், வீடுகளில் இருந்த வானொலிப் பெட்டிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள், நெல் மூடைகள், சைக்கில்கள்

போன்ற அசையக் கூடிய பொருட்கள் அத்தனையையும் ஏற்றிச் சென்றார்கள். மீதியாகக் கிடந்த உழவு இயந் திரங்கள், மோட்டார் சைக்கில்கள், கடைகளில் கிடந்த எஞ்சிய பொருட்கள், உடைகள், புத்தகங்கள் போன்ற வற்றை எரித்திருந்தார்கள். வீடுகளின் மீது மோட்டார்க் குண்டுகளும், ''ஷெல்'' களும் ஏவப்பட்டு உடைக்கப் பட்டிருந்தன. உடைக்கப்பட்ட வீடுகளுக்கு நெருப்பு வைத்திருந்தார்கள். பெற்றோல் குண்டுகளின் மூலம் பல வீடுகளின் கதவுகளும், கூரைகளும் எரிக்கப்பட்டிருந்தன.

வீடுகளில் பாலுக்காக கட்டி வைக்கப்பட்டிருந்த பசு மாடுகள் கொண்டு செல்லப்பட்டிருந்தன. சில வீடுகளில் இருந்த மாட்டு வண்டிகள் மூலம் பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டிருந்தன. வீடுகளில் இருந்த புத்தகங்கள் குர்ஆன்கள் போன்றவை பாதைகளிலும், சந்தியிலும் குவிக்கப்பட்டு தீ மூட்டப்பட்டிருந்தன. வீடுகளில் இருந்த முக்கிய தஸ்தாவேஜுகள் கிழித்து வீசப்பட்டிருந்தன.

சமையற் பாத்திரங்களும், சமையலறைத் தளபாடங் களும் காலால் மிதிக்கப்பட்டு நொறுக்கப்பட்டிருந்தன. சில வீடுகளில் சமையற் பாத்திரங்களுள் மலசலம் கழித்திருந்தார்கள். வீடுகளில் வயற் பாவனைக்காக வைக்கப்பட்டிருந்த விவசாய இரசாயனப் பொருட்களை கிணறுகளினுள் போட்டிருந்தார்கள். சில தென்னை மரங்களில் (தெம்பிலி) குரும்பைக் குலைகள் அறுக்கப் பட்டு குடிக்கப்பட்டிருந்தன.

மின்சார வயர்கள் அறுக்கப்பட்டு இப்பிரதேசங்கள் இருளாக்கப்பட்டன. இவர்களின் இந்தக் கோரத் தாக்குதலுக்குத் துணையாக இந்தியப் படையினர் முஸ்லிம் பிரதேசத்தினுள் வந்து நின்று முஸ்லிம்கள் அப் பிர தேசத்தினுள் ஊடறுத்துச் சென்று விடா வண்ணம துப்பாக்கியால் சுட்டபடி காவல் காத்து நின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



விடியாத அந்த இரவு விடிவதற்கு முன் இத்தனை கொடூரமும் கொடியவர்களால் நடாத்தி முடிக்கப்பட்டது. இவை அத்தனை நிகழ்வுகளையும் இயக்கிய வண்ணம் கோயில் ஒலி பெருக்கி அடிக்கடி ஆணைகளைப் பிறப்பித்த வண்ணமேயிருந்தது.

எந்த உதவியுமின்றி நட்டாற்றில் தவித்து நின்ற முஸ்லிம்கள் அல்லாஹ்வின் உதவியை மட்டுமே நம்பி பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தமிழ்க் கொடியவர்களால் ஊர் தகனமாக்கப் பட்டுக் கொண் டிருந்த போது அல்லாஹ்வின் உதவியால் நிலவு விழுந்து கொண்டிருந்த் அந்த இரவு திடீரெனக் கறுத்து இரவு 2-30 மணியளவில் இடி முழக்கத்துடன் பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது.

மழை பொழிய ஆரம்பித்ததும் அவர்களது தீ வைக்கும் வேலை ஓரளவு தணிந்தது.

அவ்வேளையில் கோயில் ஒலி பெருக்கி ''வன் செய லில் ஈடு பட்டுக் கொண்டிருந்தவர்களை உடனடியாக ஆலய அருகில் இருக்கும் அவர்களது வாகனங்களுக்கு வந்து சேருமாறு இந்தியப் படையினர் அழைக்கிறார்கள்'' என்று அறிவித்ததும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும், குண்டு வெடிப்புச் சத்தங்களும் ஓரளவு அடங்கின.

இதிலிருந்து, இந்தியப் படையினரும் இணைந்து தான் இந்த அயோக்கியமான, நாச வேலையில் ஈடு பட்டார்கள் என்பதும் வெளி இடங்களிலிருந்து இந்தியப் படையின் வாகனங்கள் மூலம் தான் ஆட்கள் கொண்டு வரப்பட்டார்கள் என்பதும் தெளிவாகின்றது.

விடியாத அந்த இரவு விடிவை நோக்கி விரைந்தது. பள்ளி வாசல்களில் சுபஹ் தொழுகைக்கான ''அதான்'' கூறப்பட்டது. சுபஹ் தொழுகை முடிந்த பின் அப்பிர

தேச முஸ்லிம்களும், ஏனையவர்களும், மெது மெதுவாக அப்பிரதேசத்தை நோக்கிச் சென்ற போது அங்கு நின்று கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் துப்பாக்கியால் சுட்டுத் துரத்தினர்கள்.

அங்கு சென்றவர்கள் கண்ட காட்சி, உடைக்கப்பட்ட வீடுகளில் இருந்து வீரமுனைத் தமிழ்ப் பெண்கள் கதிரை, கட்டில் போன்ற வீட்டுத் தளபாடங்களை, சுமந்து சென்று கொண்டிருந்தார்கள். சில ஆண்கள் நெல், அரிசி மூடைகளை தோள்களில் சுமந்து சென்று கொண்டிருந்தார்கள்.

இவை அனைத்தையும் இந்தியப் படையினர் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சில தமிழ் இளைஞர்கள் இந்தியப் படையின் உடை தரித்து நடமாடிய காட்சியும் குறிப்பிடத்தக்கது.

அடுத்த நாள் (18.05.1989) காலை 8.00 மணி வரைக்கும் மக்கள் அப்பிரதேசத்துக்குச் செல்ல முடியாத நிலையாயிருந்தது. பின்னர் மெது மெதுவாக ஒருவர் பின் ஒருவராக ''கைர்'' பள்ளிவாசல் அருகில் சென்ற போது, வீரமுனைப் பாதையின் மத்தியில் முக்காலியில் (STAND) பொருத்தப்பட்ட பாரிய துப்பாக்கி (எல்,எம்.ஜீ.) களையும் இந்தியப் படையினர் வைத்திருக்கும் ரகமான துப்பாக்கிகளை ஏந்திய வண்ணமும் சில தமிழ் இளைஞர்கள் வீரமுனை தமிழ்க் கிராம எல்லையில் நின்று கொண்டிருந்தார்கள்.

சில தமிழர்கள் கை தட்டிக் கும்மாளமிட்டுச் சிரித்துக்கொண்டு, வாருங்கள் என்று கையினல் சைகை செய்து அழைத்தவாறும் கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள்.

பள்ளி வாசல்களில் தஞ்சமடைந்திருந்த மக்கள் வெளியேறப் பயந்த வண்ணம் முகாம்களிலேயே முடங்கிக் கிடந்தார்கள். சில தாய்மார்கள் தம் மக்களிடம் ''மகனே, வெளியே செல்லாதே. இந்தியன் சுட்டு விடுவான்'' என்று அச்சமூட்டிக் கொண்டி



ருந்தார்கள். சிறுவர்கள் பயந்து பயந்து பாதைகளை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாவமறியாப் பச்சிளம் பாலகர்கள் பரிதவித்துக் கொண்டிருந்தார்கள்.

வீரமுனையை அண்மியுள்ள பகுதிகளிலும், 5ம் குறிச்சியிலும், செம்மண்வட்டைக் குறிச்சியிலும், தமிழ்க் குறிச்சியிலுமாக கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தும் தீக்கிரையாகியும் இருந்தன. சில மாடுகளும், நாய்களும் துப்பாக்கி ரவைகளுக்கு இலக்காகி இறந்து கிடந்தன. வீடுகளில் சேமிக்கப்பட்டிருந்த நெல் மூடைகளும், வயல்கள் விதைப்பதற்காக தயார் செய்யப்பட்டிருந்த நெல் மூடைகளுமாக கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூடைகள் ஏற்றிச் செல்லப்பட்டும் எரிந்தும் இருந்தன.

சம்மாந்துறை வாழ் 44000க்கும் மேற்பட்ட மக்கள் தஞ்சம் புகுந்திருந்த அகதி முகாம்களாவன.

(1) கமு/அல்முனீர் வித்தியாலயம்.
(2) கமு/அல் மர்ஜான் வித்தியாலயம்.
(3) கமு/மகளிர் வித்தியாலயம்.
(4) கமு/தாறுஸ் ஸலாம் வித்தியாலயம்.
(5) கமு/முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயம்.
(6) மஸ்ஜிதுல் மனர் பள்ளிவாசல்.
(7) மஸ்ஜிதுல் சலாம் ''
(8) '' ஜாரியா ''
(9) '' முபாஸா ''
(10) '' ஜலாலியா ''
(11) '' தைக்காப் பள்ளி வாசல்.
(12) '' புஷ்ருப் பள்ளி வாசல்.

18.05.1989 பி.ப. 2.00 மணியளவில் ஹெலிகொப்டர் மூலம் வர்த்தக கப்பற்துறை அமைச்சர் ஜனுப் ஏ.ஆர்.மன்சூர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல முதல்வருமான ஜனுப். எம்.எச்.எம். அஷ்ரப் தேசியப்

பட்டியல் எம். பீ. ஜனாப். எம். ஏ, அப்துல் மஜீது ஆகியோர் வருகை தந்து எல்லா அகதி முகாம்களையும் சேதமுற்ற பிரதேசங்களையும் சென்று பார்வையிட்டனர்.

அவர்கள் இந்தியப்படை அதிகாரிகளுடனும், இலங்கைப் படை அதிகாரிகளுடனும், முஸ்லிம், தமிழ் சமூகங்களின் பிரதி நிதிகளுடனும் கலந்து பேசி இரு சமூகங்களில் இருந்தும் பத்துப் பத்துப் பேர் கொண்ட சமாதானக் குழு ஒன்றையும் தெரிவு செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நிலைமையை நேரில் அவதானிக்கும் பொருட்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். எம்.எச்.எம். அஷ்ரப் எம். பீ. அவர்கள் அன்றிரவு முழுக்க இலங்கைப் பொலீஸாருடனும், இந்தியப் படையினருடனும் கூட்டுரோந்தில் ஈடுபட்டார்.

அடுத்த நாள் 19.05.1989 அன்று காலையில் கோரக்கர் வீதியில் உள்ள தமிழ்ப் பிரதேசத்தினூடாக வான் ஒன்றில் வந்த ஆயுதமேந்திய தமிழ்க் குழு ஒன்று அப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களின் வீடுகளுக்குத் தீ வைத்தது. உடனடியாக, அவ்விடத்திற்கு விரைந்த இந்தியப் படையினரும் பொலீஸாரும் அக் குழுவை நோக்கிச் சுட்டு அசம்பாவிதத்தைத் தடுத்தனர். தப்பிச் சென்ற அக் குழுவினர் கோரக்கர் வீதியினூடாக கல்லரிச்சல் குறிச்சியிலுள்ள பயினன் கட்டு ஆற்றடிக்குச் சென்று அங்கு குளித்துக் கொண்டிருந்தவர்களைத் தாக்க ஆரம்பித்தனர்.

மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு ஓடோடிக் கொண்டிருந்தார்கள். உடனே அவ்விடத்துக்கு விரைந்து வந்த பொலீஸாரும் இந்தியப் படையினரும் மீண்டும் அக்குழு மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அக் குழுவினரும் எதிர்த்து துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.



அந்தத் துப்பாக்கிச் சமரின் போது வானில் வந்த கொள்ளையர் கூட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். இந்திய வீரரொருவர் காயமடைந்தார்.

அவ்வாறு வந்த குழு கல்முனையில் இருந்து வந்த ஈ.என்.டீ.எல் எப். இயக்க குழுவென்பதும், இறந்த நபர் ஈ.என்.டீ.எல்.எப். உறுப்பினர் என்பதும் பின்னர் தான் தெரிய வந்தது.

ஈ.என்.டீ.எல்.எப். இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்து அரசியலில் பங்கு கொண்ட இயக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் துப்பாக்கிச் சமர் நடந்த போது ஆற்றினுள் குளித்துக் கொண்டிருந்தவர்கள் தாம் குளித்த ஆடைகளுடன் வயல் வெளிகளினூடாக கிட்டத்தட்ட 3மைல்கள் ஓடி நிந்தவூரை அடைந்தனர். அங்கு 15 இற்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் அகதிகளாக தஞ்சம் அடைந்திருந்தனர்.

நிலைமை ஓரளவு சீராகிவிட்டது என்றெண்ணி தத்தமது வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீண்டும் முகாம் நோக்கி ஓடலாயினர்.

இந்தியப் படை வீரர் தாக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக சம்மாந்துறை நகரெங்கும் மூலை முடுக்குகளெல்லாம் இந்தியப் படையினர் குவிக்கப்பட்டார்கள். இந்தியப் படையின். யுத்த டாங்கிகளும், கவச வாகனங்களும் குவிக்கப்பட்டன. துருப்பினர்கள் ஊரின் எல்லா வீதிகளிலும், நடமாடிக் கொண்டிருந்தனர். ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

சம்மாந்துறை இன்றுடன் அழிந்து தரைமட்டமாகி விடுமோ என்ற அச்சத்தினால் மக்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள். பொழுது புலரப் புலர மக்களின் உயிர்

களும் உலர்ந்து கொண்டிருந்தது. பசியோ, தாகமோ இன்றி மக்கள் அழுது கொண்டிருந்தார்கள். இருள் நெருங்க நெருங்க மக்களின் உள்ளங்களும் இருண்டு கொண்டிருந்தன.

அடுத்த நாளான 20-05-1989 அன்று வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு.ஏ. வரதராஜப் பெருமாள், வடக்கு-கிழக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளருமான ஜனுப்.எம்.எச்.சேகு இஸ்ஸடீன், மாகாண சபை உறுப்பினர்களான ஜனுப். எம். வை. எம். மன்சூர், ஜனுப். எம். முனுஸ் காரியப்பர் ஆகியோர் வருகை தந்து சேதமுற்ற இடங்களையும், முகாம்களையும் பார்வையிட்டனர்.

இன்றிரவே, சொறிக்கல்முனை, வீரமுனை, மண்டூர், என்ற தமிழ்க் கிராமங்களை அண்மியுள்ள வீரச்சோலை எனும் கிராமமும், 6ம் குளனி எனும் முஸ்லிம் கிராமமும் சம்மாந்துறையில் நடைபெற்ற தாக்குதல் போன்று தாக்கப்பட்டு சூறையாடப்பட்டது. அக்கிராம முஸ்லிம்கள் அகதிகளாக சம்மாந்துறை மகளிர் வித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

வீரச்சோலைக் கிராமத்தைச் சென்று பார்த்தபோது அங்கிருந்த பள்ளிவாசல் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டிருந்தது. குர்ஆன்களும், கிதாபுகளும் குவிக்கப்பட்டு தீ மூட்டப்பட்டிருந்தன. கிழித்து வீசப்பட்டிருந்தன. அது மட்டுமன்றி, பள்ளிவாசல் சுவர்களில் ''ஓம்-சக்தி, இது தான் முஸ்லிம்களின் ஓம். இது இனிமேல் எங்கள் கோயில்'' என்று எழுதப்பட்டிருந்தது. இவ்வயோக்கியமான செயல் முஸ்லிம்களின் உள்ளத்தை மேலும் புண்படுத்தியது.

இதே தினத்தில் அம்பாறை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் காரியாலயத்திலும் இந்தியப் படையினர் நிலை கொண்டனர்.



21-05-1989ம் திகதி மல்லிகைத்தீவு எனும் தமிழ்க் கிராமத்தை அண்மியுள்ள ''நெயினகாடு'' எனும் முஸ்லிம் கிராமமும் சம்மாந்துறைத் தாக்குதல் போன்று தாக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டிருந்தது. இக்கிராமத்திலிருந்த சகல வீடுகளும், குடிசைகளும் எரிக்கப்பட்டிருந்தன. அங்கு வாழும் பாமர விவசாயிகளின் மாட்டு வண்டிகள் கூட கொண்டு செல்லப்பட்டிருந்தன. மாட்டு வண்டிகள் மூலம் மல்லிகைத் தீவை நோக்கி நெல் மூடைகள் ஏற்றப்பட்டிருந்தன. அவ்வாறு நெல் ஏற்றிச் சென்ற போது சாக்குகளிலிருந்த ஓட்டைகளினூடாக நெல் வீதிகளில் கொட்டப்பட்டிருந்தது. சில இடங்களில் நெல் மூடைகள் விழுந்தும் கிடந்தன. தென்னை மரங்களில் இருந்த குரும்பைக் குலைகள் கூட வெட்டப்பட்டிருந்தன. வாழை மரங்கள் கண்ட படி நாசமாக்கப்பட்டிருந்தன.

நெயினு காடு பள்ளி வாசலினுள் சென்று அங்கிருந்த குர்ஆன்களையும், கிதாபுகளையும், பாய்களையும் குவித்து வைத்து தீ வைத்திருந்தனர். அங்கிருந்த உண்டியல் சுட்டுத் திறக்கப்பட்டு பணம் யாவும் எடுக்கப்பட்டிருந்தது.

நெயினு காடு கிராமத்தின் ஒரு ஓரத்தில் அமைந்துள்ள தமிழர்களின் குடிசைகள் எந்தச் சேதமுமின்றிக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அது மட்டுமன்றி அதேயிரவு 6ம் குளனியில் எஞ்சியிருந்த வீடுகள் மீண்டும் தீக்கிரையாக்கப்பட்டதுடன் சில இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்கள்.

சமாதான ஒப்பந்தம் நடைபெற்றுவிட்டது. இனிமேல் அச்சமின்றி, அவரவர் வீடுகளுக்கும், வயல்களுக்கும் போகலாம். இந்தியப் படையினர் பாதுகாப்பு வழங்குவார்கள் என்று கூறப்பட்டதால் சிலர் தங்கள் இருப்பிடங்களை நோக்கியும், வயல்களை நோக்கியும் சென்று கொண்டிருந்த போது, தமிழர்கள் இடை வழிகளில் நின்று மறித்து வாள்களால் வெட்டியும், இரும்புப் பொல்களால் அடித்தும் காயப்படுத்தியிருந்தார்கள்.

22ம் திகதி சம்மாந்துறைக்கு அமைச்சர் குழுவொன்று விஜயம் செய்து பொலீஸ் நிலையத்தில் சமாதான சபையினரின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே சில முதியோர்களும், இளைஞர்களும், மஜீட் புர வீதியிலும், வங்களாவடி வீதியிலும், வைத்து தமிழர்களால் மிகவும் கொடூரமான முறையில் வாள்களால் வெட்டப்பட்டும் தடிகளால் தாக்கப் பட்டும் பொலீஸ் நிலையத்திற்கு வந்திருந்தார்கள். சில முதியோர்களது முகங்களும் தலைகளும் பிளந்திருந்தன. பார்க்கவே பயங்கரமான முறையில் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

உடனடியாக பாதுகாப்பிற்குப் பொறுப்பான இந்தியப் படையிடம் காட்டிய போது அவர்கள் மிகவும் பொடு போக்காக 'வெட்டியவர்களைத் தெரியுமா? காட்டுவீர்களா?' என்று கேட்டு மளுப்பிக் கொண்டிருந்தார்கள். ''ஆம், ஆட்களைக் காட்டுவோம்'' என்று சிலர் கூறிய போது ''அவர்கள் எங்கிருப்பவர்கள்''? என்றுகேட்டனர்''அவர்கள் கணபதிபுரம், மல்வத்தையில் இருப்பவர்கள்'' என்று கூறி ''வாருங்கள் அவர்களைக் கைது செய்து வருவோம்'' என்று கூறிய போது அங்கு நின்ற இந்தியப் பொறுப்பதிகாரி ஒருவர் எதிரே நின்ற பொலீஸார் ஒருவரைக் காட்டி, அவருடன் சென்று கைது செய்து வருமாறு கூறி, அவ்விடத்ந்தவிட்டு நழுவ ஆரம்பித்தார்.

அப்போது, குறிக்கிட்ட மாகாண சபை உறுப்பினர் ஒருவர் பாதுகாப்பிற்குத் தற்போது பொறுப்பு நீங்கள் தானே, சமாதான சபைத் தீர்மானமும் அதுதானே, என்று கூறியபோது அந்த அதிகாரி அவற்றையெல்லாம் செவிமடுக்காது அவ்விடத்தைவிட்டு மிகவும் நாசூக்காக நழுவிக் கொண்டார்.

பின்னர் அமைச்சர் குழுவிற்குப் பாதுகாப்பளிக்க வந்திருந்த அம்பாறைப் பொலீஸாரின் வாகனத்தில், காயப்பட்டவர்கள் ஏற்றி அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.



இவைகள் ஒரு புறமிருக்க, 25-05-1989 இரவு 9.00 மணியளவில் மாவடிப்பள்ளி முஸ்லிம் கிராமத்திற்குள் ஆயுதபாணிகளாக இருளில் மறைந்திருந்த குழு பள்ளி வாசலில் தொழுது விட்டு வெளியேறி வந்து கொண்டிருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து விட்டு வான் ஒன்றில் தப்பி ஓடியது.

அந்த காட்டு மிராண்டித்தனமான தாக்குதலினால் மாவடிப்பள்ளிக் கிராமத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்கிக் கொண்டிருந்த இஸ்லாமிய உணர்வுள்ள சமூகத் துடிப்பான இளைஞர்கள் மூவர் துடி துடித்து அவ்விடத்திலேயே இறையடி எய்தினார்கள். ஏனைய இருவர் படுகாயமடைந்து அம்பாறை வைத்திய சாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த மனித உயிர் வேட்டையின் போது அனியாயமாக கொடியவர்களால் வேட்டையாடப்பட்ட சகோதரர்கள் எஸ்.எச்.எம். பரீட், யாஸீன் பாவா காதர் முஹிடீன், ஏ. எல். அப்துல் மஜீட் ஆகியோர்களாகும்.

சகோதரர் பரீட் அவர்கள் யாழ் பல்கலைக்கழக 2ம் வருட பட்டதாரி மாணவராவர். ஏனையவர்கள் வியர்பாரிகளாவர்.

இந்நிகழ்ச்சி நடைபெற்று முடிந்த பின்னர் அவ்விடத்திற்கு வந்த இந்தியப் படையினர், அவ்விடத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த ஜனாஸாக்களையும், காயமுற்று உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களையும், பார்த்துவிட்டு ஏனோ? தானோ? என்று சென்று விட்டனர். எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அக்கிராம மக்கள் அடுத்த ஊர்களுக்கு எந்தத் தொடர்புகளையும் மேற்கொள்ள முடியாதவாறு அமைதிப் படையினரால் 18ம்திகதி பிரகடனப் படுத்தப்பட்ட

ஊரடங்கு தடுத்தது, காயமுற்றவர்களையாவது காப்பாற்ற முடியாத நிலையில் அக்கிராம மக்கள் திண்டாடிக் கொண்டிருந்த போது வெடிச்சத்தம் கேட்டதால் என்னவென்று அறிவதற்கு மாவடிப் பள்ளிக்கு வயல் வெளிகளினூடு சென்ற சம்மாந்துறை இளைஞர்களின் உதவியால் ஜனாஸாக்கள் சம்மாந்துறை மகளிர் வித்தியாலய அகதி முகாமிற்குக் கொண்டு வரப்பட்டன. காயமுற்ற சகோதரர்கள் அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்கள்

இத்தனை வெறித்தாண்டவங்களும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்ததால் சம்மாந்துறை மக்களின் தென்னந்தோட்டங்களும், மரக்கறித் தோட்டங்களும், கால் நடைகளும், பரந்திருந்த வளத்தாப்பிட்டி, மல்வத்தை, நெயினாகாடு போன்ற பிரதேசங்களால் பயணம் செய்ய முடியாமையால் தொடர்பற்றுக் கிடந்தன.

இந்நிலையில் அப்பிரதேசங்களிலிருந்த ஐம்பதிற்கும்(50) மேற்பட்ட தென்னந்தோட்டங்களும், வாழைத் தோட்டங்களும், சேதப்படுத்தப்பட்டிருந்தன. தோட்டங்களிலிருந்த வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டிருந்தன, முஸ்லிம்களின் 10,000 இற்கும் மேற்பட்ட கால் நடைகள் தமிழர்களால் கொண்டு செல்லப்பட்டிருந்தன. கமுகு மரங்களும், மா, பலா, வேம்பு மரங்களும் அறுத்துச் செல்லப்பட்டிருந்தன. சில பசு மாடுகளும், ஆடுகளும் ஆயிரக்கணக்கான கோழிகளும், இந்தியப் படையினருக்கும், தமிழர்களுக்கும் விருந்தாக்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாது காய்ந்த இறைச்சியாகவும் சேமிக்கப்பட்டிருந்தது.

நிலைமை இவ்வாறிருக்கையில் மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ அவர்களினால் நியமிக்கப்பட்ட விஷேட தூதுக் குழு 24-05-1989 இல் சம்மாந்துறைக்கு வந்திருந்தது. அக்குழுவில் தரைப்படைத் தளபதி ஜேனல் ஹமில்டன் வணசிங்க, பொலீஸ்மா அதிபர் திரு. ஏனஸ்ட் பெரேரா, இந்திய தூதரகத்தின் விஷேட தூதுவர் ஆகியோர் வந்து நிலைமையை நேரில் அவதானித்தார்கள். பின்னர் மறுதினம் வர்த்தக கப்பற்துறை அமைச்சர் ஜனாப். ஏ. ஆர். மன்சூர், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன, புணர்வாழ்வு ராஜாங்க அமைச்சர் திரு. வின்சன் பெரேரா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல முதல்வருமான ஜனாப். எம்.எச்.எம். அஷ்ரப், கண்டி மாவட்ட எம். பீ. ஜனாப். அப்துல் காதர், பொலநறுவை மாவட்ட எம். பீ. ஜனாப் அப்துல் மஜீட், திகாமடுல்ல எம்.பீ. திரு. திவ்வியநாதன். தேசியப்பட்டியல் எம். பீக்களான ஜனாப்கள் எம். ஏ. அப்துல் மஜீத், ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரும், பத்திரிகை ஆசிரியர்களும், நிருபர்களும் வந்திருந்தார்கள்.



சம்மாந்துறை பொலீஸ் நிலையத்தில் சமாதானக் குழுவினருக்கும் இரு சமூகங்களின் பிரதி நிதிகளுக்கும் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இன்னல்கள் யாவும் எடுத்துரைக்கப்பட்டன. அத்தோடு வீரமுனைப் பகுதியில் பாதுகாப்பு அமைச்சர் வருவதை முன்னிட்டு அன்றிரவு தமிழர்களால் வேண்டுமென்றே அவர்களது வெற்று வீடுகளுக்கு அவர்களே தீயிட்ட சம்பவமும் கூறப்பட்டது.

முஸ்லிம்களது புணர்வாழ்வு, எதிர்கால பாதுகாப்பு, பிரச்சினைக்கான உண்மையான காரணங்கள், சதி வேலைகளின் பின்னணிகள் அனைத்தும் எடுத்துரைக்கப்பட்டதுடன், 17ம் திகதி தீர்க்கப்பட்ட துப்பாக்கி ரவைகளின் கவசக் கோதுகள், ஷெல்களின் மீதிகள், மோட்டார்க் குண்டுகளின் மீதிகள், வெடிக்காத ரவைகள் போன்றனவ தரைப்படைத் தளபதியிடம் காண்பித்து ஒப்படைக்கப்பட்டன. அத்தோடு முஸ்லிம்கள் அச்சமின்றி வாழ

வழி வகுக்குமாறும், சம்மாந்துறையில் வலம் வந்து கொண்டிருக்கும் இந்தியப்படையின் கவச டாங்கிகளை அகற்றுமாறும் முஸ்லிம்கள் சார்பாக வேண்டிக் கொள்ளப்பட்டது.

தமிழர்களின் சார்பாகப் பேசியவர், இந்தியப் படையினரின் யுத்தடாங்கிகள் தமிழர்களின் பாதுகாப்பிற்கு அவசியமானவை. ஆதலால் அவைகள் அகற்றப்படக் கூடாதெனவும், இப்பிரச்சினைக்கு சம்மாந்துறை பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸாரே காரணமெனவும் அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் இந்தியப் படையினரும் பொலீஸாரும் கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களென வும் பாதுகாப்பளிப்பார்களெனவும், தீர்மானிக்கப்பட்ட துடன் தனிப்பட்ட எந்த நபரும் ஆயுதங்கள் வைத்திருப்பது தடை செய்யப்படும் எனவும் கூறப்பட்டது.

இத்தனை சமாதானங்களும் நடைபெற்ற பின்னரும் அன்றிரவே சம்மாந்துறை மூங்கிலடி வீதியில் வசித்து வந்த "சின்னத்தம்பி" எனும் முஸ்லிம் இளைஞர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு நாளொரு வண்ணமாக கடத்தல், கொலைகள், தீ வைப்புக்கள் தினமும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. சமாதானங்கள் வாயளவில் மட்டுமே இருந்து கொண்டிருக்கின்றன.

அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் மக்கள் இன்னும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். சில குடும்பங்கள் பகற்பொழுதுகளை வீடுகளிலும் இராப் பொழுதுகளை அகதி முகாம்களிலும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த வீடொன்றில் கதவொன்று பலமாக உடைக்கப்



படும் சத்தம் கேட்டாலும் கூட மக்கள் வெருண்டோடும் நிலையில் அச்சமுற்றிருக்கின்றனர்.

இங்கு வாழும் விவசாயிகளின் 7000க்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் செய்கை பண்ணப்படாது கிடக்கின்றன. அரச காரியாலயங்கள் வைத்தியசாலைகள், இயங்காதிருக்கின்றன. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

பேச்சுவார்த்தை, சமாதானம் என்று நாளுக்கு நாள் சாம்பல் மேடுகளில் சமாதானம் பேசப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

எத்தனை சமாதானங்கள் எடுத்தோதப்பட்டாலும் மக்கள் இந்தியப்படை மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள்.

அது மட்டுமன்றி இலங்கை அரசு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றும்போது முஸ்லிம்களின் கருத்துக்களையோ, அபிலாஷைகளையோ, அபிப்பிராயங்களையோ கருத்திற் கொள்ளாது முஸ்லிம் சமூகத்தை நட்டாற்றில் தள்ளி விட்டுத் தான் தோன்றித் தனமாக ஒப்பந்தத்தைச் செய்து விட்டதால் தான் இன்று முஸ்லிம் சமூகம் சின்னாபின்னப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வொப்பந்தத்தை நிறைவேற்றும் போது முஸ்லிம்கள் சார்பாக இருந்த முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் (குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள்) தம் சமூகத்தைப்பற்றி சிறிதேனும் அக்கறையில்லாது சமூகத்திற்காகப் பேசத் திராணியற்று பேரினவாத அரசிற்கு கூஜா தூக்கிகளாகவும் ஆமாம் சாமிகளாகவும் அமர்ந்திருந்து ஒப்பந்தத்தை நிறைவேற்றக் காலாக இருந்ததன் விளைவே இவ்வட்டூளியங்களும், அநியாயங்களும் என்ற உண்மை நிலையை மக்கள் நன்கு உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

இன்றுள்ள நிலைமையில் அச்சம் தீர்ந்து மக்கள் அமைதியாக வாழ வேண்டுமெனில் எல்லோரும் ஆயுத பாணிகளாக்கப்பட வேண்டும். அல்லது நிராயுத பாணி களாக்கப்பட வேண்டும். இந்திய விஸ்தரிப்புப் படை அகற்றப்பட வேண்டும். அவர்களால் குவித்து வைக்கப் பட்டுள்ள கனரக ஆயுதங்கள் அகற்றப்பட வேண்டும். முஸ்லிம்களுக்கு தனிப்பட்ட முறையில் அரசாங்கம் பாதுகாப்பளிக்க வேண்டும். முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் ஊர்காவல் படை அமைக்கப்படல் வேண்டும்.

இந்நிலைமைகள் ஏற்படாதவிடத்து முஸ்லிம்கள் அநியா யமாகக் கொல்லப்படுவதையும், முஸ்லிம்களின் இரத்த வெள்ளத்தில் தமிழர்கள் நீந்திப் பழகுவதையும் யாரா லும் தடுக்க முடியாது.

சம்மாந்துறை நிலைமை ஜனாதிபதி மட்டத்திற்கும், பாராளுமன்ற மட்டத்திற்கும் சென்ற பின்னரும் கூட முஸ்லிம்களுக்கு எவ்வித பாதுகாப்போ உத்தரவாதமோ ஏற்படவில்லை.

இவ்வாறான நிலைமைகளால் முஸ்லிம் மக்கள் அரசின் மீதும் நம்பிக்கையிழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள், அஃதே மாகாண அரசாலோ, மத்திய அரசாலோ எவ்வித பலனுமில்லை என்பதை மக்கள் நன்கு உணர்ந்து விட்டனர். இன்று முஸ்லிம்கள் கேட்பாரற்ற அனாதைகளாய் வீதிக்கு வீசப்பட்டு விட்டார்கள்.

இதே போன்று வடகிழக்கில் மூதூர் தொடக்கம் கிண்ணியா, ஓட்டமாவடி, வாழைச்சேனை, காத்தான்குடி, கல்முனை, மாளிகைக்காடு என்று ஒவ்வொரு முஸ்லிம் கிராமமும் தாக்குதலுக்குள்ளாகி அகதிகளாக்கப் பட்டு விட்டார்கள்.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைகளால் முஸ்லிம்கள் அவர்களுக்கென்ற தனித்த பாதுகாப்பை எவ்வழிகளால் தேடலாம் என்று சிந்திக்கத் தொடங்கி விட்டனர்.



ஒரு சிறுபான்மைச் சமூகத்தை இன்னொரு பெரும் பான்மைச் சமூகம் நசுக்கிக் கொண்டிருக்கும் போது விடுதலையுணர்வு தானாகவே பிறக்கும்.

அஃதே, இன்று வடக்கு கிழக்கில் பெரும்பான்மைச் சமூகமான தமிழர்கள் அந்நிய நாட்டு இராணுவத்துடன் இணைந்து, சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம்களை நசுக் கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறான அவர்களின் நசுக்கலும், அநியாயங்களும், தனி முஸ்லிம் மாகாணம் ஒன்றே முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பளிக்கும் என்ற சிந்தனை முஸ்லிம்களின் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, முஸ்லிம்களுக்கென்ற தனி முஸ்லிம் மாகா ணம் உருவாக்கப்பட்டால் மட்டுமே, முஸ்லிம்கள் அச்ச மற்றவர்களாய் சுய மரியாதையுடையவர்களாய் வாழ முடியும் என்ற வெளிப்படைக்கு வரத் தொடங்கி விட்டனர்.

அந்த தனி முஸ்லிம் மாகாணத்தை எந்த வழியில் அணுகிப் பெறமுடியுமோ, அந்த வழிகளில் செல்லத் தயாராகி விட்டார்கள்.

இனிமேல் முஸ்லிம்களின் உணர்வுகளையும் உணர்ச்சி களையும் யாராலும் தடுக்க முடியாது அவர்களது வீரா வேசத்தை எவரும் தடை செய்ய முடியாது. முஸ்லிம் இளைஞர்களின் எதிர்காலத்தை நேரான எதிர்காலமாக மாற்ற வேண்டுமெனில் அது முஸ்லிம் மாகாணம் ஒன்றால் மட்டுமே முடியும் என்பது தெட்டத் தெளிவு.

ஆகையால், அனைவரும் எமது அச்சமற்ற சுய கௌரவத்தைக் காக்கக் கூடிய தனி முஸ்லிம் மாகாணத்திற்கு ஒற்றுமையுடன் போராடுவோம். வெற்றி பெறுவோம்.

எமது வெற்றி ''அல்லாஹ்'' ஒருவனின் கையில் மட்டுமே தங்கியுள்ளது.

''அல்லாஹு அக்பர்''

இவ் ஆக்கத்தை உருவமைக்க ஒத்துழைப்பு நல்கிய முஸ்லிம் இளைஞர் முன்னணி அங்கத்தவர்கட்கும், சம்மாந்துறை அகதிகள் நிவாரணக் குழுவினருக்கும் எங்கள் பூரண நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எந்த ஒரு சமூகத்து இளைஞர்களின் இதயங்கள் இரும்பினைப் போன்று இருக்கின்றனவோ, அந்த சமூகத்திற்கு வாள்கள் தேவையில்லை.

-அல்லாமா இக்பால்-

கடற்கரையில் அமர்ந்து கொண்டு கடலலைகளுடன் எவ்வாறு மோதலாம் என்று கற்பனை பண்ணாதே. கடலில் குதித்து போராடு; வெற்றி நிச்சயம்.

-அல்லாமா இக்பால்-



# கடல் கக்கிய லெமூரியா

- கவிஞர் ஹஸீர் -

கடல் கடந்து
ஒரு தேசம்
இடம் பெயர்ந்து விட்டது.

●

துப்பாக்கி பேனாக்களில்
ரத்த மையூற்றி
நெருப்பு முகப்புடன்
புத்தகம் எழுதி,
மண்டையோடுகளில்
அச்சிட்டார்கள்.
(மலிவுப் பதிப்புகள்
விலைக்குத் தக்கவாறு
விதவிதமான எலும்புகளில்
வெளிவருகிறதாம்!)

●

அஸ்ஸாமில் அச்சிடப்பட்ட
ஆயிரம் ஆயிரம் பிரதிகள்
அவசரமாக
விற்பனையானதால்,
மீரத்தில்
மீளவும் ஒரு பதிப்பு
மிக வேகத்தோடு
வெளியாயிற்று.

●

கத்தி-
கோடாரி-
வெட்டறுவாள்-
தீப்பந்தம்
என்று
வகைவகையானபேனாக்களில்-
பெற்றோல்
ரத்தம்
கண்ணீர்-
என்கிற மைகளை
மாற்றி மாற்றி ஊற்றி,
தேசியத்தைப் பற்றி
எல்லாத் தெருக்களிலும்,
போட்டி போட்டுக்கொண்டு
புத்தகம் போட்டார்கள்.

●

இரவில்
எழுதத் தொடங்கி,
விடியுமுன்னரே
விற்றும் தீர்த்தார்கள்.

●

பத்து வயது சிறுவனின்
ரத்தத்தால்
பாலபோதினி எழுதி,
ஐந்து வயது குழந்தையின்
உடம்பில்,
கோணல் மாணலாக
(கோரம் விகாரமாக)
அச்சடித்தார்கள்.

கண்ணகியின்
கற்பைப் பற்றிய
கதை-
கட்டுரை-
கவிதை வரிகளை
முஸ்லிம் குமர்களை
மல்லாக்கக் கிடத்தி,
அவர்களின்
கிழிந்த முந்தானைகளில்
விழுந்து விழுந்து
எழுதித் தள்ளினார்கள்.

●

நெருப்பு நியோன்களால்
வீடுகள்
கடைகள்
பள்ளிகளை சோடித்து
பூகோளம் கருகும்
வெப்பச் சுவாலைகளாக
வெளிச்சம் போட்டு;
'இனவாத ஒழிப்பு'
என்கிற தலைப்பில்
வீதி வீதியாக
விளம்பரம் செய்தார்கள்

●

புதுப்புதுத் தலைப்புக்களில்
ஒரே உள்ளடக்கத்தை;
ஒரிஸ்ஸா,
குஜராத்
என மாநிலத்திற்கு
மாநிலம்
மாற்றி
மாற்றி;
புரட்டி
உருட்டி
விதவிதமாக
வெளியிட்டார்கள்.

●

மானுடத்தை
நெரித்து-
எரித்து
பொரித்துச் சுவைக்க-
இனவெறி வினாகிரி
அரைக் கரண்டி;
மத வெறி மிளகாய்
ஒரு பிடி கலந்த;
'ஊன்-உயிர் - கறி' என்ற
சமையற் குறிப்பை
பூணூல் தலைப்போடு
புத்தகம் போட்டார்கள்.

●

ஒப்பாரிகளையும்,
ஓலங்களையும்,
அழுகை ஒலியையும்,
முனங்கல் வரிகளையும்
நவீன இசையாக
அழகு படுத்தி
புதுத் தோத்திரங்களாகவும்
பக்திப் பாடல்களாகவும்
ரசித்து மகிழ
மனித நரம்பெடுத்து
புதிய வீணையொன்று
செய்தார்கள்.

●

'ஜன கண மண' வையும்:
'இன மன பிண' மென
இசைத்தட்டாக்கி
விற்பனைக்குக்
கொண்டு வந்தார்கள்.



நாடு பூராகவும்
கிளைகள் நிறுவி
வீடு வீடாக
சிரித்துச்
செரித்து,
எரித்து
விற்றார்கள்.

●

பம்பாய் முடுக்குகளில்
டில்லித் தெருக்களில
இன்னும் இன்னும்
அந்தத் தேசம் பூராகவும்
கோஷம் போட்டுப் போட்டு
கூவிக் கொடுத்தார்கள்.
காவற் துறையின்
கண்காணிப்போடு:
இராணுவ வீரர்களின்
அணிவகுப்பு
மரியாதைகளுடன்
வெளியீட்டு விழாக்களை
வெற்றிகரமாக
நடத்தி முடித்தார்கள்.

●

உள்நாட்டில் விற்பனை
அமோகமாய் நடப்பதால்;
இப்போது
விற்பன்னர்களை
இலங்கைக்கும் அனுப்பி
வியாபாரத்தை
விரிவுபடுத்திவருகிறார்கள்.

●

இங்கும் வியாபாரம்
சூடு பிடிக்கிறது!
தெருத்தெருவாய்த்
தகிக்கிறது!
கிழக்கில்-
சூரியனையே
பொசுக்குகிறது.
'அகதி முகாம்'
என்ற பெயரில்
ஆயிரக்கணக்கில்
அச்சாகிறது.

●

அவர்களின்
ஹனுமானுக்கு
ஏற்கனவே
நெருப்பு விளையாட்டில்
அனுபவம் இருக்கிறது தானே.

●

அவர்களின
துரியோதனர்களுடன்
எங்கள்
இராவணண்களும்
இணைந்து
கூட்டுறவுப் பதிப்பகம்
போட்டிருக்கிறார்கள்.
கட்சிகளைத் தூக்கி
தம் தலைகளில்
தொப்பிகளாகப்
போட்டுக்கொண்டிருக்கும்
எங்கள்
கண்ண பரமாத்மாக்கள்
பாஞ்சாலியின்
நிர்வாணப் படத்தை
அட்டையில் போட்டிருக்கும்
ஆபாசப் புத்தகத்தை

ஆஹா ஓஹோ வென்று
பார்த்து ரசிக்கின்றார்கள்

●

ஏறாவூரில்
எழுதிய புத்தகம்
மளிகைக்காட்டு
மலிவுப் பதிப்பென
காத்தான்குடியில்
அச்சுப் பதித்து
கல்முனைக் கடைகளில்
நெருப்பு வேகத்தில்
விற்கப்படுகிறது.

●

பாரதீ!
நீ
சிங்களத் தீவினிற்கு
பாலம்
அமைக்கச் சொன்னது
இப்படி ஒரு
பாவப் புத்தகம்
பதிப்பிக்கத்தானா?!

●

நீ-
ஆடு!
பாடு!!
கும்மியடி!!!

●

கடல் கடந்து
உன் தேசம்
இலங்கைக்கு
இடம் பெயர்ந்துவிட்டது.

-நன்றி: ''அல் ஹஸனாத்''-

★

''கைகளிலும் விலங்கு,
கால்களிலும் விலங்கு:
சிந்தனை சிறைப்பட்டு
வாய்களிலும் பூட்டு!

அந்நிய நுகத்தடியின்
அடிமைச் சுமையழுத்த
நசுங்கி இனிக் கிடக்கும்
நாட்கள் ஒரு சிலதான்''

-பைஸ் அகமத் ஃபைஸ்-



சம்மாந்துறை அகதிகள் நிவாரணக் குழுவின் கணக்கெடுப்பின்படி
**17-05-1989 கலவரத்தின் பின் தொகுக்கப்பட்ட கலவர சேத விபரம்**

| | சேத விபரம் | | ரூபா |
|---|---|---|---|
| 1. | எரிந்ததும் உடைக்கப்பட்டதுமான வீடுகள் | 627 | 33642700 |
| 2. | எரிந்ததும் களவாடப்பட்டதும் நெல் 40,000 மூடை (விதை நெல் உட்பட) | | 14655725 |
| 3. | களவாடப்பட்ட, காணுமற்போன மாடுகள் | 7000 | |
| | ,, ,, ஆடுகள் | 1600 | 15683901 |
| 4. | நகைகள் - - | - | 6958236 |
| 5. | உடைக்கப்பட்ட, எடுத்து செல்லப்பட்ட தளபாடங்கள் | | 8394175 |
| 6. | ,, ,, ,, பாவனைப்பொருட்கள் | | 15514034 |
| 7. | பணம் - - | - | 3112287 |
| 8. | எரிந்த, கொண்டு செல்லப்பட்ட சைக்கிள்கள் | 643 | 1350725 |
| 9. | ,, ,, ,, மோட்டார் ,, | 05 | 93000 |
| 10. | ,, ,, ,, டேப்-ரேடியோக்கள் | 511 | 1041820 |
| 11. | ,, ,, ,, தையல் மெஷின்கள் | 175 | 866941 |
| 12. | ,, ,, ,, மின் விசிறிகள் | 73 | 141500 |
| 13. | ,, ,, ,, படங்குகள் | 75 | 411600 |
| 14. | ,, ,, ,, டிரக்டர்கள் | 02 | 381326 |
| 15. | ,, ,, ,, ரீ. வீ. | 50 | 473600 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. | எரிந்த, | எடுத்து | செல்லப்பட்ட | வண்டிகள் | 26 | 298330 |
| 17. | ,, | | | கொள்ளையிடப்பட்ட கடைகள் | 54 | 1337626 |
| 18. | அழித்துச் சேதமாக்கப்பட்ட தோட்டங்கள் | | | | 47 | 156815 |
| 19. | அழிக்கப்பட்ட பண்ணைகள்-களவாடியகோழிகள் | | | | 9000 | 473184 |
| 20. | எரிந்த, | உடைந்த, | களவாடிய | பிரிஜ்கள் | 08 | 123200 |
| 21. | ,, | ,, | ,, | டெக்குகள் | 04 | 89000 |
| 22. | -- | -- | ,, | வேன் | 01 | 435000 |
| 23. | -- | -- | ,, | வெல்டிங் மெசின்கள் | 02 | 20000 |
| 24. | -- | -- | ,, | மில் ஹலர் | 06 | 311000 |
| 25. | -- | -- | ,, | வாட்டர் பம் | 07 | 103400 |
| 26. | ,, | -- | -- | சொட்டில் | 19 | 85200 |
| 27. | - | -- | ,, | டைப்ரைட்டர் | 12 | 118500 |
| 28. | ,, | - | -- | வைக்கோல் குவியல் | | 800 |
| 29. | ,, | ,, | ,, | வேறு பொருட்கள் | | 27241157 |
| 30. | விதைப்பாட்டு வேலைகளில் பாதிக்கப்பட்டு செய்கை பண்ண முடியாத நிலையிலான வயல்களால் நஷ்டம் | | | | | 4086970 |
| 31. | இம்முறை வயற் செய்கை மூலம் கிடைக்க வேண்டிய வருமானமும் இப்போகத்தில் நஷ்டமாகையால், கிட்டத்தட்ட மொத்த நஷ்டம். | | | | | 102000000 |

## தமிழ்ப் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்ட எமது சகோதரர்களின் விபரம்.

| | ச.திகதி | பெயர் | விலாசம் | வயது | தி.நி. | த.எ. | தொழில் | ச.ந.இ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ✓ | எம்.சீ. செய்யது இப்ருஹீம் | சம்மாந்துறை | | ஆனவர் | 3 | விவசாயம் | சம்மாந்துறை |
| 2. | 7.10.84 ✓ | ஏ.எல். முஹம்மது இஸ்மாயீல் | மாவடிப்பள்ளி | 45 | ஆனவர் | 3 | விவசாயம் | கல்முனை |
| 3. | 29.03 88 | ஐ.எல்.அப்துல் றஹுமான் | சம்மாந்துறை | | ஆகாதவர் | 8 | விவசாயம் | சம்மாந்துறை |
| 4. | 29.03.88 | எம்.எல். ஆதம்பாவா | சம்மாந்துறை | | ஆனவர் | 3 | விவசாயம் | சம்மாந்துறை |
| 5. | 22.08.88 | ஏ.எல். நஜிமுதீன் | மாவடிப்பள்ளி | 19 | தனித்தவர் | 8 | மாணவன் | மாவடிப்பள்ளி |
| 6. | 31.10.88 | எம்.ஐ. அமீர் அலி | சம்மாந்துறை | 20 | தனித்தவர் | 7 | விவசாயம் | சம்மாந்துறை |
| 7. | 28.02.89 | எம் எல். முஹம்மது ஹனீபா | சம்மாந்துறை | 30 | தனித்தவர் | 4 | விவசாயம் | சம்மாந்துறை |
| 8. | 12.03.89 | வை.எல். சுலைமா லெவ்வை | சம்மாந்துறை | 29 | ஆனவர் | 6 | விவசாயம் | சம்மாந்துறை |
| 9. | 25,03.89 | எம்,ஏ. முஸ்ரக் அலி | சம்மாந்துறை | 41 | ஆனவர் | 5 | கிளாக் | சம்மாந்துறை |
| 10. | 25.03.89 | எம்.ரீ.எம். யாசீன் | சம்மாந்துறை | 36 | தனித்தவர் | 7 | விதானை | சம்மாந்துறை |
| 11. | 03.04.89 | ஏ.எல். ஜலால்தீன் | சம்மாந்துறை | 18 | தனித்தவர் | 7 | மாணவன் | சம்மாந்துறை |
| 12. | 04.05.89 | ஏ. முஹம்மது நஜீப் | சம்மாந்துறை | 18 | தனித்தவர் | 3 | மாணவன் | சம்மாந்துறை |
| 13. | 04.05.89 | ஏ.எல். ஜௌபர் | சம்மாந்துறை | 35 | ஆனவர் | 6 | சாரதி | சம்மாந்துறை |
| 14. | 04.05.89 | எம்.எம் பாயிஸ் | சம்மாந்துறை | 19 | தனித்தவர் | 4 | ஜா.ந.மா | சம்மாந்துறை |
| 15. | 14.05.89 | எம்.ஏ. ஆதம்பாவா | சம்மாந்துறை | 28 | தனித்தவர் | 12 | விவசாயம் | நெயினகாடு |
| 16. | 14.05.89 | ப்.எல். சலீம் | சம்மாந்துறை | | தனித்தவர் | 08 | சாரதி | நெயினகாடு |
| 17. | 17.05.89 | ஏ. ஹயாத்து முஹம்மது | பொத்துவில் | 20 | தனித்தவர் | | | சம்மாந்துறை |
| 18. | 22.05.89 | எஸ்.எச்.எம். பரீட் | மாவடிப்பள்ளி | 26 | தனித்தவர் | 14 | ஆசிரியர் | மாவடிப்பள்ளி |
| 19. | 22.05.89 | வை.பீ. காதர் முஹிடீன் | மாவடிப்பள்ளி | 28 | தனித்தவர் | 3 | வியாபாரம் | மாவடிப்பள்ளி |
| 20. | 22.05.89 | ஏ.எல்.ஏ. மஜீட் | மாவடிப்பள்ளி | 30 | ஆனவர் | 3 | விவசாயம் | மாவடிப்பள்ளி |
| 21. | 03.05.89 | எஸ்.எல். அஹமட்லெவ்வை | சம்மாந்துறை | 60 | ஆனவர் | 10 | விவசாயம் | சொ.க.ச.துறை |
| 22. | 31.05.89 | ஏ.எம். அலியார் | சம்மாந்துறை | 45 | ஆனவர் | 9 | விவசாயம் | சொ.க.ச.துறை |

குறிப்பு: ச.திகதி – சம்பவத் திகதி; தி.நி. – திருமண நிலை: த.இ.எ. – தங்கி இருப்பவர்களின் எண்ணிக்கை;
ச.ந.இ. – சம்பவம் நடந்த இடம்; ஆனவர் – திருமணமானவர்; ஆகாதவர் – திருமணமாகாதவர்;
சொ.க. ச.துறை – சொறிக் கல்முனை, சம்மாந்துறை; ச.துறை – சம்மாந்துறை; அம். – அம்பாறை
கண். – கண்டி; மட். – மட்டக்களப்பு; மா.பள்ளி – மாவடிப்பள்ளி அ.வை. – அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலை; வா.வ.தி.க.இ. – வாகனத்தின் வகையும் திகதியும் கடத்திய இடமும்.
● – தகப்பனும் மகனும்; □ – அண்ணனும் தம்பியும்

தமிழ்ப் பயங்கரவாதிகளால் சுடப்பட்டும், அடிக்கப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டு குற்றுயிராக வாழ்ந்து கொண்டும், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டும் இருப்போர் விபரம்.

| | ச.திகதி | பெயர் | தி.நி. | வயது | விலாசம் | த.எ. | தொழில் | ச.ந.இ. | அ. வை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 05.01.88 | எம். யாசீன் பாவா | ஆன | 25 | ச. துறை | 4 | விவசாயம் | ச. துறை | ச.துறை; அம் |
| 2. | 13.01.89 | எம்.எம்.ஆதம்லெவ்வை | ஆன | 40 | ,, | 9 | விவசாயம் | ,, | ச.துறை; அம்; மட். |
| 3. | 13.01.89 | ஏ. முஹிதீன் பாவா | ஆன | 24 | ,, | 4 | விவசாயம் | ,, | ச.துறை; அம்; கண். |
| 4. | | எம்.ஐ. தஸ்தகீர் | தனி | 26 | ,, | 7 | விவசாயம் | ,, | ச.துறை; அம்; கண். |
| 5. | 25.02.89 | எம். ஹாறூன் | தனி | 18 | ,, | 8 | மாணவன் | ,, | ச. துறை. |
| 6. | 20.08.88 | ஏ.எம். முஸ்தபா ● | ஆன | 70 | ,, | 12 | விவசாயம் | ,, | ச.துறை; மட். |
| 7. | 20.08.88 | எம்.எம்.அப்துல் றஷீட் ● | தனி | 27 | ,, | 12 | விவசாயம் | ,, | ச.துறை; மட். |
| 8. | 25.03.89 | கே.எம்.எஸ்.எம். பழீல் | தனி | 29 | ,, | 2 | மாணவன் | ,, | ச.துறை; அம்; கண். |
| 9. | 17.05.89 | எம்.ரீ.எம் பாறுக் □ | ஆன | 35 | ,, | 3 | விவசாயம் | ,, | ச.துறை; அம். |
| 10. | 17.05.89 | எம்.ரீ.ஏ. கபூர் □ | ஆன | 32 | ,, | 4 | விவசாயம் | ,, | ச.துறை; அம். |
| 11. | 17.05.89 | எம்எஸ் நியாஸ்டீன் | தனி | 18 | ,, | 10 | மாணவன் | ,, | ச.துறை; அம். |
| 12. | 17.05.89 | ஏ.முஹிடீன் பாவா | ஆன | 30 | ,, | 2 | விவசாயம் | ,, | ச.துறை; அம்; கண். |
| 13. | 17.05.89 | ஏ ஜாபீர் | தனி | 20 | ,, | 7 | கூலிவேலை | ,, | ச.துறை; அம்; கண். |
| 14. | 22.05.89 | ஐ.கே. அபூதாஹிர் | தனி | 20 | மா.பள்ளி | 6 | கூலிவேலை | மா.பள்ளி | ச.துறை; அம். |
| 15. | 22.05.89 | ஏ.எல்.அப்துல் ஸலாம் | தனி | 20 | ,, | 8 | கூலிவேலை | ,, | ச.துறை; அம்; கண். |

தமிழ்ப் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட வாகனங்களும் கொள்ளையிடப்பட்ட பொருட்களும்

| | ச.திகதி | பெயர் | விலாசம் | வா. வ.தி க.இடமும் | | ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 1. | 09.10.87 | ஏ.எல் அப்துல் மஜீ[illegible] | சம்மாந்துறை | ஹொண்டா சீடீ200 90ஸ்ரீ7702 | மல்வத்தை | 110,000/- |
| 2. | 17.05.88 | கே.எல். யாசீன் பாவா | சம்மாந்துறை | ஹொண்டாசீ 50:96ஸ்ரீ1512 | சவளக்கடை | 23,750/- |
| 3. | 06.05.88 | சீ· ஆதம்பாவா | சம்மாந்துறை | சைக்கிள் சீஎச் 2995 | | 2000/ |
| 4. | 20.09.88 | எம்.ரீ.எம்.சம்சுதீன் | சம்மாந்துறை | எல்ப் கெண்டர் 40ஸ்ரீ9956 | சவளக்கடை | 450,000/- |
| 5. | | எஸ்.எம். முஸ்தபா | சம்மாந்துறை | ஹொண்டாசீடீ125; 8ஸ்ரீ1306 | மல்லிகைத்தீவு | 35 000/- |
| 6. | 15.01.88 | எம். யாசீன் | சம்மாந்துறை | மாட்டுவண்டி | | 20.000/- |
| 7. | 04.05.89 | ஐ.எம். ஜெமில் | சம்மாந்துறை | ஹொண்டாசீடீ200; 10ஸ்ரீ7185 | ச. துறை | 75,000/- |
| 8. | 14.05.89 | ஏ.மரியம் பீவி | சம்மாந்துறை | எம்எப்240 ரெக்டர் 37ஸ்ரீ3823 | நெயினாகாடு | 350,000/- |
| 9. | 13.05.89 | எஸ்.எல்.அஹமட்லெவ்வை | சம்மாந்துறை | எம்எப்240 ரெக்டர் | சொறிக்கல்முனை | 350,000/- |
| 10. | 23.06.87 | எம்.ரீ.எம். சம்சுதீன் | சம்மாந்துறை | வீட்டில் கொள்ளை | பணம் | 55,000/- |
| 11. | 18.03.88 | யூஎல் எம். இப்றுஹீம் | சம்மாந்துறை | வீட்டில் கொள்ளை | நகை | 53,350/- |
| 12. | 13.10.88 | யூ.எல் எம் இப்றுஹீம் | சம்மாந்துறை | வீட்டில் கொள்ளை | நகை | 25,710/- |
| 13. | 21.03.88 | கே. ஆதம்பாவா | சம்மாந்துறை | வழிப்பறிக்கொள்ளை மல்வத்தை 33மூ· நெல் | | 11,550/- |
| 14. | 22.01.88 | ஏ.எல்.எம். இஸ்மாயீல் | சம்மாந்துறை | வீட்டில் கொள்ளை | நகை | 10,000/- |
| 15. | 26.09.88 | ஏ.எல்.முஹிடீன் பாவா | சம்மாந்துறை | வீட்டில் கொள்ளை | நகை பணம் | 1,23500/- |

முஸ்லிம்களாகிய நாம் கடந்தகால நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டு அதனை ஒரு வஞ்சமாகவோ, பழியாகவோ, தீராத வடுவாகவோ நம்மனதிற் கொள்வதிலும் பார்க்க இந்நிகழ்வுகள் ஏன் எமக்கு ஏற்பட்டது என்றும், அவற்றினால் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன என்றும், இனிமேல் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படாமல் எவ்வாறு எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாமென்றும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியதே அவசியமாகின்றது.

இந் நிகழ்வுகள் எமக்கு அன்றுதான் ஏற்படவுமில்லை. அன்றோடு முடிவடையவுமில்லை. ஆதலால், ஈமான்கொண்ட முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாத்தின் அடிப்படையில் அவற்றை ஆராய வேண்டும்.

இறைவன் எம்மையும், எம் சமூகத்தையும் பலவித மான சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளான். சஹாபாக்களின் வரலாறுகளே இதற்குச் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன.

முதலில் நாம் இந்நிகழ்வுகள் ஏற்படுவதற்காக விட்ட தவறுகளை எண்ணிப் பார்க்குமிடத்து, நாம் இஸ்லாமிய வாழ்வு முறையில் காட்டிய பொடுபோக்கே எம்மை இந்நிலமைக்கு ஆட்படுத்தியுள்ளது என்பதை தெட்டத் தெளிவாக அறியக் கூடியதாகவுள்ளது.

நாமத்தால் இஸ்லாமியனாகப் பிறந்த நாம் இஸ்லாமிய வரையறைகளையும், வாழ்க்கைத் திட்டத்தையும், எம் பெருமானார் (ஸல்) எமக்காக விட்டுச் சென்ற அல்குர்ஆன், அல்-ஹதீசையும் சம்பூரணமாகப் பேணி நடக்காததால் இறைவன் எம்மை இத் தண்டனைக்கு ஆளாக்கியுள்ளான் என்றால் அது மிகையாகாது. அல்லாஹ் தன் திருமறையில்,

விசுவாசிகளே! நீங்கள் (உண்மை) விசுவாசிகளை அல்லா மல் நிராகரித்துக் கொண்டிருப்போரை (உங்கள்) உற்ற நேசர்களாக நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள்....
(அல்குர்ஆன் 4:144)

என்று கூறியுள்ளான். நாம் இந்த வரையறையினை விட்டும், மிகவும் தூரம் சென்று விட்டோம். எமது சமூகத்தை நசுக்கிக் கொண்டு வந்த காபிர்கள் மீது நாம் அதிக அன்பு காட்டினோம். அவர்களின் சொற்களுக்கும், செயல்களுக்கும் மதிப்பளித்து அவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் புரிந்து எம்முடன் இணைத்து வாழ்ந்து வந்தோம்.

அது மட்டுமன்றி எம்முள் சிலர் அவர்களைச் சிறந்த போராளிகள் என்றும், தியாகிகள் என்றும் பெரிதாகக் கணித்து தனிப்பட்ட ரீதியில் தம் சொந்த சுய இலாபங்களுக்காக இரகசியமாகவும் பரகசியமாகவும் உறவு வைத்து வந்துள்ளார்கள்.

அவர்கள் எம் சமூகத்தை ஒவ்வொரு கிராமமாகத் திட்டமிட்டு தாக்கி அழித்துக் கொண்டு வந்த போதும், எமதூர் மக்களின் சொத்து சுகங்களை குட்டிச் சுவராக்கி வந்த போதும், எம்முள் இன்றும் ஒரு சிலர் அவர்களது அட்டூளியங்களைக் கூட கருத்திற் கொள்ளாது தமக்கும் தமது சொத்து சுகங்களுக்கும் ஏதாவது நடந்து விடலாம். என்றெண்ணி, அவர்களிடம் வக்காலத்து வாங்கி எமது சமூகத்தை விலை பேசுமளவிற்குஉறவுகள் வைத்திருந்தார்கள். அல்லாஹ் தன் அழகிய திருமறையில்,

இவர்கள் விசுவாசிகளையன்றி, நிராகரிப்போரையே (தங்கள்) பாதுகாவலர்களாகவும், எடுத்துக் கொண்டார்கள் இவர்கள் அவர்களிடத்தில் கண்ணியத்தை (யடைய) விரும்புகிறார்களா? நிச்சயமாக கண்ணியங்கள் யாவும் அல்லாஹ்வுக்குரியனவே. (அவர்களுக்குரியனவல்ல)
அல்குர்ஆன் 4 : 139)

என்று கூறுகின்றான்.



''முஸ்லிம் சமூகம் ஒரு உடல் போன்றது. அது எங்கு பாதிக்கப்பட்டாலும் உடலில் ஒரு அங்கம் பாதிக்கப்பட்டது போன்றதாகும்'' என்பதை மறந்து, எனக்கு மட்டும் ஒன்றும் நடந்து விடாமல் இருந்தால் சரி, அதற்காக நான் எது வேண்டுமானாலும் செய்வேன் என்ற மனப் போக்கே எமது இந்நிலைக்கு முதற்படி எனலாம்.

அவ்வாறு எம்முள் சிலர் தான் தோன்றித்தனமாக நடக்கிறார்கள் என்பதை அறிந்தும், அறியாதவர்கள் போல ஏனையவர்கள் நடந்து கொண்டது மற்றொரு தவறாகும்.

உங்களில் எவர் தீமையைக் காண்கிறாரோ அவர்

- அதனை, தனது கரத்தால் மாற்ற முயல வேண்டும். இயலாவிடின்,
- அதனை, தனது நாவினால் மாற்ற முயல வேண்டும். அதுவும் இயலாவிடின்,
- தனது மனத்தால் அதனை மாற்ற வேண்டும் என்ற துடிப்பாவது இருக்க வேண்டும்.

இது ஈமானின் இறுதி நிலை.

– அல் ஹதீஸ் (ஆதாரம்: முஸ்லிம்)

மேற்சொன்ன பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்மொழியிலிருந்தும் நாம் தவறி விட்டோம்.

எமது சகோதரர்களில் சிலர் ஏதோ ஒரு பிரமையில் காபிர்களின் பின்னால் ஈடுபட்டுத் திரிந்த போதும் இஸ்லாமிய வழி முறைகளில் இருந்து தவறிச் சென்ற போதும், அவர்களது பிழை பற்றி கரிசனை கொள்ளாமல், அவர்களுக்குப் புத்திகளைப் புகட்டாமல், இஸ்லாத்தை ஊட்டாமல் நாமும் அவ் இளைஞர்களின் தாய் தந்தையரும் பொடுபோக்காய் இருந்ததும் இந்தக் கறை படிந்த அத்தியாயத்தின் வடுக்கள் எனலாம்.

அது மட்டுமன்றி சில தொழில் முறைகளில், நாங்கள் தானாகவே விலகிக் கொண்டு அந்தத் தொழில்களை காபிர்களுக்கே உரிய தொழிலாக அடிமைப் படுத்தி விட்டோம். எமது நபிமார்கள் ஒவ்வொரு தொழிலிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். தொழில் வேற்றுமை பார்க்காது வழிகாட்டினார்கள் என்பதை மறந்து சில தொழில்களை அவர்களுக்கே உரிமை விட்டதில் இருந்தும் எமக்கு நாமே தவறிழைத்துக் கொண்டோம்.

அல்லாஹ் தன் திருமறையில்!

விசுவாசிகளே! உங்கள் இனத்தவர்களையன்றி (சிலர்களை) உங்களுக்கு அந்நியோன்யமானவர்களாக நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள். (ஏனென்றால்) அவர்கள் உங்களுக்குத் தீங்கிழைப்பதில் ஒரு சிறிதும் குறைவு செய்வதில்லை. நீங்கள் துன்புறுவதை அவர்கள் விரும்புகிறார்கள். (அவர்களுடைய) கொடிய குரோதம் வெளிப்பட்டு விட்டது. (உங்களைப் பற்றி) அவர்களின் இருதயங்களில் மறைந்திருப்பவைகளோ, மிகக் கொடியவை. நிச்சயமாக நாம் அவர்களுடைய அடையாளங்களை உங்களுக்கு விவரித்து விட்டோம். நீங்கள் அறிவுடையோராக இருந்தால் (அறிந்து கொள்ளலாம)

அல்குர்ஆன் 3:118)

உங்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்படின் (அது) அவர்களை வருந்தச் செய்கிறது. உங்களுக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டாலோ அதற்காக அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். ஆகவே நீங்கள் பொறுமையைக் கைக் கொண்டு பயபக்தியுடன் இருந்தால் அவர்களுடைய சூழ்ச்சி உங்களுக்கு எத்தகைய தீங்கையும் விளைவித்துவிடாது. (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் அவர்களுடைய செயலைச் சூழ்ந்து கொண்டிருக்கிறான்

அல்குர்ஆன் 3:120



இந்த வழிகாட்டல்களிலிருந்தும் நாம் தவறி விட்டோம். எமது கடந்தகால வாழ்க்கைப் போக்குகள் மேற்கூறப்பட்ட இறை வசனங்களுக்கு அமைந்ததாக இருக்கவில்லை. அது மட்டுமன்றி,

**விசுவாசிகளே! இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்துவிடுங்கள்.**

**(அல்குர்ஆன் 2:208)**

என்ற அல்லாஹ்வின் வசனத்தை சம்பூரணமாக கடைப்பிடிக்கவில்லை. ஈமான் கொண்ட முஸ்லிம்களாகிய எங்கள் மீது அல்லாஹ் சில விதிமுறைகளையும், எமது வாழ்வை முன்மாதிரியான வாழ்வாக அமைக்க எம்மீது சில கடமைகளையும் விதித்தான். கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற ஐங்கடமைகளை எம் மீது கடமையாக்கினான்.

ஆனால் நம்மில் அனேகமானோர் இன்று தொழுகையற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். “தொழுகையற்றவன் என்னைச் சேர்ந்தவனல்ல” என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

அஃதே நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற கடமைகளும் எம்முள் சீராகப் பேணப்படாமல் இருக்கின்றன. எமக்குச் சொந்தமாயுள்ள காணிகளின் விளைச்சலிலும் மற்றும் செல்வங்களிலும் நாம் சக்காத் கடமையினை உரியமுறையில், நிறைவேற்றினால் இன்று எமதூரில் ஏழை எளியோர் என்ற வர்க்கமே இல்லாதிருந்திருக்கும். சனசக்தி திட்டத்திலும் எவ்வளவோ மேலானதொரு திட்டத்தை அல்லாஹ் எமக்குக் காட்டித் தந்தும் நாம் அதிலிருந்து தவறி விட்டோம்.

இவ்வாறாக நாங்களே இஸ்லாத்தைப் பரிகசித்து வாழ்ந்தமையும், இஸ்லாமிய அடிப்படையில் எமது காரியங்கள் கைகொள்ளப் படாமையுமே எமது இந்த நிலைக்கு காரணம் என்று ஊகிக்கலாம்.

முஸ்லிம் சமூகத்தைச் சீரழிக்க முஸ்லிம் விரோத சக்திகள் கங்கணம் கட்டி நின்ற வேளையில் நாம் பூரண இஸ்லாமியர்களாக அந்த சக்திகளை முறியடிக்க முனையவில்லை.

விசுவாசிகளே! மக்களில் ஒரு சாரார் உங்களுக்குத் தீங்கிழைக்கத் தீர்மானித்து தங்கள் கைகளை உங்களளவில் நீட்டிய பொழுது அவர்கள் கைகளை உங்களை விட்டுத் தடுத்து அல்லாஹ் உங்களுக்குப் புரிந்த அருளை, நீங்கள் நினைத்துப் பாருங்கள். ஆகவே அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். அன்றி விசுவாசிகள் (யாவரும்) அல்லாஹ் (ஒருவன்) மீதே நம்பிக்கை வைக்கவும்.

(அல்குர்ஆன் 5 : 11)

என்பதை மறந்து விட்டோம். மாறாக எம்முள் நாமே ஒருவரையொருவர் குறை கூறிக் கொண்டும் ''புகழ்'' என்னும் அற்பமான ஒன்றிற்காக பாடுபட்டுக் கொண்டுமிருந்தோம். எம்மை ஆட்சி செய்த அரசுகள் கூட காலத்துக்குக் காலம் தந்திரங்கள் செய்து முஸ்லிம்களின் பலத்தை ஓங்காமல் செய்ய பல வழிகள் மூலம் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வந்தன. சட்டங்கள் மூலமும், அரசியல் அமைப்புக்கள் மூலமும், இன்னோரன்ன வழிகளாலும் முஸ்லிம்களை கூறுபோட்டு முஸ்லிம்களை சின்னாபின்னப்படுத்தி வந்தனர்.

எம்மை வழிகாட்ட வேண்டியவர்களும், எமது சமூகத்தை சீரான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய கடப்பாடுடையவர்களுமான எமது தலைமைத்துவங்கள் மாறாக



சமூக சிந்தனையற்று தானும் தன் சொகுசு வாழ்க்கையுமே பெரிதென்றெண்ணி வாழாவிருந்து விட்டார்கள்.

அந் நிலைமையைக் கூட நாம் உணராதவர்களாக எமக்குள் பல வித பிளவுகளை நாமே ஏற்படுத்திக் கொண்டு எமது புனிதமான இஸ்லாமிய சமூகத்திற்குள்ளேயே நாம் பிரிந்து கிடந்தோம்.

நாம் நம் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிய தலைமைத்துவ கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காமல் எங்களுக்குள் நாங்கள் பிரிவடைந்து நமக்குள்ளேயே கட்சி பேதமென்றும் உயர்வு தாழ்வுஎன்றும் பிளவுற்று கிடந்ததன் மூலம் அந்நிய சூழ்ச்சிக் காரர்களை எம்முள் ஊடுருவ வழி வகுத்தோம்.

மேலும் நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்து விட வேண்டாம்.

(அல்குர்ஆன் 3 : 103)

என்ற இறை வசனத்தை நாங்கள் அனைவரும் ஒருமித்துக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டோம்.

இஸ்லாமிய விரோத சக்திகள் கிழக்கு வாழ் முஸ்லிம் கிராமங்களை ஒவ்வொன்றாகத் திட்டமிட்டுத் தாக்கிக்கொண்டு வந்த வேளையில் நமது கிராமத்தை பற்றி நாம் சிந்திக்காமல் அவ்வாறான தாக்குதலொன்றிற்கு நாம் இலக்காகி விட்டால் என்ன செய்யலாம் என்று முன் யோசனை செய்யாமல் வாழ்ந்து வந்தோம்.

அவர்களை எதிர்ப்பதற்காக (ஆயுத) பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும், உங்களுக்குச் சாத்தியமான அளவு நீங்கள் (எந்த நேரமும்) நிரந்தரப்படுத்திவையுங்கள் இதனால் அல்லாஹ்வுடைய விரோதியையும், உங்களுடைய

விரோதியையும், நீங்கள் பயப்படச்செய்யலாம். இவர்களன்றி (விரோதிகளில்) வேறுசிலர் இருக்கின்றனர். அவர்களை நீங்கள் அறியமாட்டீர்கள்; அல்லாஹ்தான் அவர்களை அறிவான். (ஆனால் அவர்களையும் நீங்கள் திருக்கிடசெய்யலாம். இதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் எதைச் செலவு செய்த போதிலும் (அதன் கூலியை) உங்களுக்கு பூரணமாகவே அளிக்கப்படும்; (அதில்) ஒரு சிறிதும் உங்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது.

அல்குர்ஆன் (8 : 60)

மேற்கூறப்பட்ட வசனம் கூறும் வழிகாட்டலின் படி நாம் தயார் செய்யாமலிருந்ததும் எமது தவறாகும்.

இன்று எமக்கேற்பட்டுள்ள நிலைமையில் நாம் எந்த உதவியுமற்ற அனாதைச் சமூகமாக மாற்றப்பட்டுள்ளோம். எமக்கான பாதுகாப்பை நாமே ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். முஸ்லிம்களுக்கு இவ்உலகவாழ்வு சோதனையானதும் தற்காலிகமானதுமாகும். நாம் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். நாங்கள் இஸ்லாத்தின் முக்கிய அங்கமான ''ஜிஹாத்'' கடமைக்கு அனைவரும் தயாராக வேண்டும். நாம் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் பூரணமான முஃமின்களாகவும், இஸ்லாமிய வரலாற்றில் வீர மரணமெய்திய சஹாபாக்களின் வரிசையிலும் எழுப்பப்பட வேண்டுமானால் எமது சொல், செயல், எண்ணங்களெல்லாம் அல்லாஹ்வுக்காகவே செயற்படுத்தப்பட வேண்டும். புகளுக்குரியவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே.

அல்லாஹ்வைத்தவிர எமக்கு யாரும் உதவியளிக்க முடியாது. இதற்கு உதாரணமாக 17.05.1989 இரவு எமது உடமைகள் தீக்கிரையாக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது பெருமழையினை பெய்வித்து உதவி செய்ததே பெரியதொரு அத்தாட்சியாகும்.



அது மட்டுமன்றி உஹுத் யுத்தம், போன்ற இஸ்லாமிய யுத்தங்களின் போது சஹாபாக்களுக்கு அல்லாஹ் உதவி செய்த முறையையும் நாம் நன்கு அறிந்துள்ளோம்.

ஆதலால் நாம் எமது நடவடிக்கையை இஸ்லாத்திற்காக அர்ப்பணிப்போம். இஸ்லாத்தின் வழியில் வாழ்ந்து வெற்றிகளைச் சம்பாதிப்போம். எமது போராட்டத்தை இஸ்லாம் ஒன்றிற்காகவே தயார் செய்வோம். எமது இஸ்லாமிய போராட்டத்தின் பாதையில் தற்காலிக இம்மை வாழ்விற்கான ஒரு ஆதாரமாக தனி முஸ்லிம் மாகாணத்தினை பெற முயற்சிப்போம்.

விசுவாசிகளே! மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து யுத்தம் புரியாதவர்களுக்கும் உங்கள் இல்லத்திலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்ய வேண்டாமென்றும், அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள்ளக் கூடாதென்றும் அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதமாக நடந்து கொள்வோரை நேசிப்பவனாகவே இருக்கிறான்.

அல்லாஹ் உங்களைத் தடுப்பதெல்லாம், மார்க்க விஷயத்தில், உங்களுடன் யுத்தம் புரிந்தவர்களுடனும், உங்கள் இல்லங்களிலிருந்தும் உங்களை வெளியேற்றியவர்களுடனும், உங்களை வெளியேற்றுவதில் (விரோதிகளுக்கு) உதவி செய்தவர்களுடனும், நீஙகள் சினேகிதமாக விசுவாசமாக இருக்கக் கூடாது என்பதுதான். ஆகவே எவர்கள் அவர்களுடன் நட்பு பாராட்டுகின்றார்களோ அவர்களே அக்கிரமக்காரர்கள்.

(அல்குர்ஆன் 60:9:9)

மேலும் அல்குர்ஆன் கூறுகின்றது.

அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால் நீங்களும் அதன் பக்கம் சாயுங்கள். அல்லாஹ்வையும் நம்புங்கள்.

(8:61)

ஆதலால் நாம் யாரையும் நம்பாது அல்லாஹ்வின் துணையுடன் எமது வெற்றிப் பயணத்தை ஆரம்பிக்க இஸ்லாமிய பாதையில் வீறு கொண்டெழுவோம். அதற்காக ஈமான் கொண்ட முஸ்லிம்களாகிய நாம் அனைவரும் பூரணமாக இஸ்லாத்தினுள் நுளைந்து கொள்வோம்.

விசுவாசிகளே! நீங்கள் தயங்கிக் கொண்டிருக்க வேண்டாம். இஸ்லாத்தில் முற்றிலும் நுழைந்து விடுங்கள். தவிர (இதனைத் தடை செய்யும்) ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின் பற்றுதீர்கள்.. நிச்சயமாக அவன் உங்களுக்குப் பயங்கரமான விரோதி.

(அல்குர்ஆன் 2 : 20)

விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்பட வேண்டியவாறு மெய்யாகவே பயப்படுங்கள், (முற்றிலும்) அவனுக்கு வழிப்பட்ட முஸ்லிம்களாக அன்றி, நீங்கள் இறந்து விட வேண்டாம்.

(அல்குர்ஆன் 4:102

-- ✶ --

**17-11-1989 அன்று தமிழ் தேசிய இராணுவத்தால் காரைதீவு பொலீஸ் நிலையத்தில் படுகொலைசெய்யப்பட்டவர்கள்.**

| | பெயர் | பொலிஸ் இல | வயது |
|---|---|---|---|
| 1. | எஸ். எம். அமீர் | 20369 | 24 |
| 2. | எம். நௌலூத் | 11962 | 24 |
| 3. | ஏ. கலந்தர் லெவ்வை | 11950 | 20 |
| 4. | ரீ. ஆதம்பாவா | 20287 | 25 |
| 5. | எம். றபீக் | 20309 | 23 |
| 6. | எம். நாஸர் | 20311 | 18 |
| 7. | ஏ. எம். காலித் | 20316 | 19 |
| 8. | வை. அபூபக்கர் | 20317 | 25 |
| 9. | எம். எம். சல்பியார் | 20318 | 24 |
| 10. | ஏ. றஷீன் | 20303 | 19 |
| 11. | எம். ஏ. றசூல் | 20325 | 22 |
| 12. | எச். பாறூக் | 20347 | 22 |
| 13. | எம். ஜனூபர் | 20296 | 21 |
| 14. | ஏ. எல். நியாஸ்தீன் | 20343 | 21 |
| 15. | எம். ஏ. ஆதம்பாவா | 20344 | 26 |
| 16. | எம். ஏ. புஹாரி | 20350 | 22 |
| 17. | ஐ. எல். அலியார் | 20355 | 25 |
| 18. | எம். ஏ. ஸி. எம். நவாஸ் | 20357 | 24 |
| 19. | ஐ. முனூஸ் | 20360 | 19 |
| 20. | ஐ. இப்றுலெவ்வை | 20363 | 21 |
| 21. | எம். மதனு சாஹிப் | 13306 | 20 |
| 22. | ஏ. மன்சூர் | 20359 | 20 |
| 23. | ஏ. முஸம்மில் | 20286 | 21 |
| 24. | ஏ சம்சுதீன் | 20306 | 22 |
| 25. | ஏ. எல். மீராமுகையதீன் | 13680 | 20 |
| 26. | ஏ. எம். முர்சலீன் | 20312 | 21 |
| 27. | ஏ. சலீம் | 20310 | 22 |
| 28. | ஏ. எல். றஷீத் | 13137 | 20 |
| 29. | கே. எம். ளாஹிர் | 20313 | 22 |
| 30. | எம். ஐ. அச்சிமுகம்மது | 20342 | 23 |

முஸ்லிம்கள் செறிவாக வாழும் அம்பாறை மாவட்டத்தை விட்டு இந்தியப் படையினர் வெளியேறியதை அடுத்து 17 11-1989 அன்று தமிழ்த் தேசிய இராணுவம் என்றழைக்கப்படும் தீவிரவாதக் குழுவினரால் அம்பாறை மாவட்டத்தில் இருந்த சகல பொலீஸ் நிலையங்கள் மீதும் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இத் தாக்குதலின் போது காரைதீவு பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொலீஸாரை சுற்றி வளைத்து அவர்களை சரணடையும் படி கோரியதும் அவர்கள் அனைவரும் சரணடைந்து தங்களிடமிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் தமிழ்த்தேசிய இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். அதன் பின் அப்பொலீஸார் முஸ்லிம்கள் வேறு தமிழர்கள் வேறாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம்கள் மட்டும் கோரத்தனமானமுறையில் இரத்ததாகம்பிடித்தபாஸிஸகொலைவெறியர்களால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.

யூதரை மிஞ்சிய கொலைஞரே! பெரும்பான்மை இனத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நீங்கள் மற்ற சிறுபான்மை இனத்தை நடத்தும் விதம் எப்படி இருக்கிறது? இனவெறியின் உச்சக்கட்டம் இது தானா? உங்களது இவ்வளவு காலப்போராட்ட வாழ்க்கையில் யுத்த தர்மத்தைப் பற்றிக் கற்றதெல்லாம் இவ்வளவு தானா? உங்கள் போராட்ட வாழ்க்கையில் நாம் செய்த நன்றியைஎப்படி மறந்தீரோ? யூதப் பிசாசுகளையும் மிஞ்சியல்லவா நீர் பிணந்தின்னப் பழகிவிட்டீர்.

இப்படிப்பட்ட அடாவடித்தனங்களால் எங்களை அடக்க நினைக்க வேண்டாம். ஏனென்றால், உங்களால் கொல்லப்பட்ட ஒவ்வொரு உயிரும், சிந்தப்பட்ட ஒவ்வொரு இரத்தத் துளிகளும் எங்கள் புனிதப்பாதையின் புதிய விளக்குகள். ஆம் இவர்கள் இஸ்லாமிய விடுதலையின் வீரப் புதல்வர்கள்; புனித ஜிஹாதின் புதிய மைந்தர்கள். இவர்கள் கப்றுகள் கூட கருத்தரிக்கும்! எங்கள் விடுதலைப் பாதையின் விடி விளக்கை ஏற்றி வைத்த புதிய நண்பர்களே! நாங்கள் ஒவ்வொருவரும் இஸ்லாமிய அடக்கலுக்கெதிராய்ப் போராடி 'ஷஹீ' தாகி சுவர்க்கத்தில் உங்களைச் சந்திப்போம். இன்ஷா அல்லா ஹ்.

--''ஆமீன்''--

## நன்றி நவில்கிறோம்

இதுவரை சம்மாந்துறையில் ஏற்படுத்தப்பட்ட கலவரங்கள், பதற்றங்கள், ஈனக் கொலைகளின் போது துயர்வுற்றிருந்த மக்களுக்கு இரவு பகல் பாராது, தன் சொந்த வேலைகளையே கவனியாது ஆறுதல் கூறியும் அமைதிப்படுத்தியும் தம்மை சமூகத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தப்லிகுல் இஸ்லாம் அரபிக் கல்லூரியின் அதிபரும், மஜ்லிஸ் அஷ்-ஷூறாவின் தலைவருமான அல்-ஹாஜ் மௌலவி M. B. M. அலியார் (தேவ் பந்த்) அவர்கட்கும், சட்டத்தரணியும் பிரஜைகள் குழுத் தலைவருமான ஜனாப் U.L.M. முஹைதீன் (J. P. U. M) அவர்கட்கும், மற்றும் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், உலமாக்கள், நம்பிக்கையாளர் சபையினர், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

''நன்றி''

நபியே! நீர் விசுவாசிகளை யுத்தத்திற்குத் (தயாராகும்படி) தூண்டுவீராக! உங்களில் (பொறுமையும்) சகிப்புத் தன்மை(யும்) உடைய இருபது பேர்களிருந்தால் இருநூறு பேர்களை வெற்றி கொண்டு விடுவார்கள். உங்களில் (அத்தகைய) நூறு பேர்களிருந்தால் நிராகரிப்போரில் ஆயிரம் பேரை வெற்றி கொண்டு விடுவார்கள். நிச்சயமாக, இவர்கள் அறிவில்லாத மக்களாக இருப்பது தான் இதற்குக் காரணமாகும்.

(அல்குர்ஆன் 8:65)

ஒரு சமூகம் தன்னைத் தானே சீர் திருத்திக் கொள்ளாத வரை அல்லாஹ் அச்சமூகத்தைச் சீர் திருத்த மாட்டான்.

(அல்குர்ஆன் 13:11)

இளைய இஸ்லாமிய சந்ததியினர்
இதய உணர்வுகளுக்காக....